In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவாசக அமுதம்

(குருபாத பூங்கழல் ஆராய்ச்சியுடன்)



திரு. அடிகளாசிரியன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவாசக அநுபூதி

(குருபாத பூங்கழல் ஆராய்ச்சியுடன்)

அ.ப. கழகத் தமிழ்த்துறைக்கு இந்நூல் அன்பளிப்பு.
சி. சிவபெருமான்
விரிவுரையாளர்
தமிழியல் துறை

ஆசிரியர்

திரு. அடிகளாசிரியர் அ.ப.க.
ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்
சித்தநாதேச்சுராதீனம்
குகையூர் அஞ்சல் - 606306
விழுப்புரம் மாவட்டம்

21/3/03



பதிப்பாசிரியர்

சோதிடரத்னா
முனைவர் அ. சிவபெருமான்
4-சி, வெள்ளி விழாச்சாலை
செயங்கொண்ட சோழபுரம் - 621802
பெரம்பலூர் மாவட்டம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குகையூர் சித்தநாதேச்சுராதீனத் திருவருள்
நிலையத்தின் ஆன்மநலப்பணி வெளியீடு - 9

நூல் குறிப்பு

நூல் பெயர்	:	திருவாசக அநுபூதி
ஆசிரியர்	:	திரு. அடிகளாசிரியர்
பதிப்பு	:	முதல் பதிப்பு (20—12—2000)
உரிமை	:	திரு. அடிகளாசிரியர்
அளவு	:	டிம்மி 1/8
பக்கங்கள்	:	xiv + 88
விலை	:	ரூ 25-00
படிகள்	:	1000
வெளியீட்டாளர்	:	திருவருள் நிலைய வெளியீட்டகம், குகையூர் - அஞ்சல் கல்லக்குறிச்சி - வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 606306. தமிழ் நாடு
அச்சகம்	:	சுபம் பிரிண்டர்ஸ், சுப்பிரமணியம் தெரு, சிதம்பரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

பதிப்புரை

நூலாசிரியர்முன்னுரை

1. குரு பாதம் — 1-11

2. அவமும் சிவமும் — 12-18

3. திருவாசகத்துள் ஓர் வார்த்தை — 19-33

4. பெருந்திரட்டில் உள்ள திருவாசகப் பாடல்கள் — 34-80

5. பிழை திருத்தம் — 81

6. நூலாசிரியர் வாழ்வும் பணியும் — 82

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிப்புரை

பக்தி நூல்களில் மிகச்சிறந்த நூல் திருவாசகம் ஆகும். இந்நூலின் சிறப்பைத் தவத்திரு. சிவப்பிரகாச சுவாமிகள் ''வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி'' என்று நால்வர் நான்மணிமாலைப் பாடலுள் (6) பாடியுள்ளார். அப்பாடலின் பொருள், ''திருவாசகம் மறையின் முடிவைக் காட்டிலும் ஆகமங்களைக் காட்டிலும் சிறந்து விளங்கிக் கேட்பவர் தம் உள்ளத்தை உருகச் செய்து உயர்ந்த கடவுள் பக்தியை உண்டாக்கும்'' என்பதாகும். இவ்வாறு சிறப்பிக்கப் பெற்ற திருவாசகத்தை அடியாகக் கொண்டு திருவாசக அநுபூதி என்ற ஞானநூலை எனது தந்தையார் பேராசிரியர் திரு. அடிகளாசிரியரவர்கள் எழுதியுள்ளார்.

கடவுள் பற்றிய உண்மையை அறிவினால் மட்டும் காண முடியாது; அறிவோடு கூடிய அனுபவத்தாலே காணமுடியும். இவ்அனுபவத்தை உணர்வதே அநுபூதி ஆகும். தமிழகத்தில் திருமூலர், மாணிக்கவாசகர், தாயுமானவர், அருணகிரிநாதர், மெய்கண்டார், இராமலிங்க அடிகளார் முதலான பல அநுபூதிமான்கள் தோன்றித் தமது அனுபவங்களைப் பாடல்களாகப் பாடியுள்ளனர். அவ்அநுபூதிமான்களுள் மிகச் சிறந்தவராகக் கருதப்படுகின்றவர்களுள் ஒருவர் மாணிக்கவாசகர் ஆவர். அவர் கடவுள் பற்றி கூறியுள்ள அனுபவ உண்மைகளை, ''திருவாசக அநுபூதி'' என்ற இந்நூல் தெளிவாகக் கூறுகின்றது. இச்சிறப்பு வாய்ந்த ஞானநூலைப் பதிப்பித்து வழங்குவதில் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

இந்நூல் வெளிவர உதவிய அனைத்து நெஞ்சங்களையும் வணங்கி மகிழ்கின்றேன். இப்பணி நாளும் தொடர இறைவனை வேண்டி வழிபடுகின்றேன்.

20—12—2000

இங்ஙன்

அ. சிவபெருமான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதாந் தத்தின் பொருள்விளக்காய்
மெய்யா கமத்தின் மதமாய
நாதாந் தத்தின் சுடருருவாய்
ஞான ஞேயத்தின் விளக்காய்ப்
போதாந் தத்தின் பொருளாகிப்
புகழும் திருவாச கப்பொருளை
மீதாந் தத்தின் உணர்ந்தவரே
விட்டார் பாசம் கிட்டாரே. (திருவாசகச் சிறப்பு)

திருவாசகத்தைப் பண்டுதொட்டு நாம் படித்து வருகின்றோம். அதில் உள்ள திருப்பள்ளி எழுச்சி என்னும் பதிகத்தைச் சைவ சமயப் பேரறிஞர் எல்லாம் மார்கழி மாதத்தில் விடியற்காலையில் ஓதி வருகின்றனர். அதில் ஓர் பாட்டை இங்கே குறிப்பிடு கின்றேன்.

"போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழினகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்யெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே"
(திருப்பள்ளிஎழுச்சி–1)

குறிப்பு:

இதில் இரண்டாவது அடியில் வந்துள்ள ஏத்தி என்கின்ற சொல் எதுகை நோக்கி ஏற்றி என நின்றது. இது செய்யுள் விகாரம். பொருள் கொள்ளும்போது ஏத்தி என்றே இதற்குப் பொருள் கொள்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்பாட்டில் வந்துள்ள 'பூங்கழல் ஏத்திநின் திருவடி தொழுகோம்' என்னும் பகுதியை அறிஞர் தெளிவாக அறிந்து படிப்பதில்லை.

பொழிப்புரை:

''என் வாழ்முதலாகிய பொருளே போற்றி. இன்று பொழுது புலர்ந்தது. முதலில் புலர்ந்தவுடன் பூங்கழலை இணைதுணை மலர்கொண்டு ஏத்தினோம். ஏத்திய அதனாலே உன்னுடைய திருமுகத்தில் எங்களுக்கு அருளைத் தோற்றுவிக்கும் அழகான நகை தோன்றிற்று. அதை யாங்கள் பெற்றுக்கொண்டு நின்னுடைய திருவடியை இரண்டாவதாகத் தொழுகோம்''.

''திருப்பெருந்துறையுறை சிவபெருமானே! உயர்ந்த விடைக் கொடியை உடையவனே! என்னை உடையவனே! எம்பெருமானே! நீ பள்ளியெழுந்தருளாய்'' என்பது இப்பாட்டின் பொழிப்புரை யாகும்.

இப்பாட்டில் நாங்கள் பொழுது புலர்ந்தவுடன் பூங்கழலை ஏத்தினோம். நாங்கள் ஏத்திய அதனால் உன்னுடைய முகத்திலே எங்களுக்கு அருளைத் தோற்றுவிக்கும் அழகான உவகை நகை தோன்றிற்று. அந்த உவகை நகையை நாங்கள் பெற்றுக்கொண்டு பின் உன்னுடைய திருவடியைத் தொழுகோம். என்று கூறப்பட்டுள்ளது.

''இப்பாட்டு சிவபெருமானை நோக்கிக் கூறியதாகும்'' அச்சிவபெருமானுக்கு நாங்கள் பூங்கழலை ஏத்தியதனால் உவகை தோன்றிற்று. அந்த உவகையை நாங்கள் பெற்றுக்கொண்டு சிவபெருமானே! உன் திருவடியைத் தொழுகோம் என்பது இப்பாட்டின் கருத்து.

இங்கே நின் திருவடி என்பது சிவபெருமான் திருவடியாகும். அச்சிவபெருமானுக்கு உவகை பூட்டுவதாய் இருப்பது முதலிலே சொன்ன பூங்கழலாகும். இப்பூங்கழலைப் பற்றி யாரும் கருதிப்படிப்பதில்லை.

''பெருந்திரட்டு ஆசிரியர் பரம்பொருளை விகிர்தபாவம் உடையது என்றும், விகிர்தபாவம் அற்றது என்றும் இரண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூறாய்ப் பிரித்து ஓதுவர். இவ்விரண்டு கூறில்விகிர்தபாவமுடைய பரம்பொருளே படைத்தல், காத்தல், அழித்தல் முதலான தொழில்களைச் செய்து ஆன்மாக்களைப் பக்குவப்படுத்தும். விகிர்தபாவமற்ற பரம்பொருளே பக்குவப்படுத்திய ஆன்மாக்களுக்குப் புகலிடமாய், பேறாய் அமையும். திருவள்ளுவர் இதனை 'புக்கில்' என்பர்.

'புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு' (340)

என்பது அவர் திருக்குறள்.

மாணிக்கவாசகர் விகிர்தபாவமுடைய பரம்பொருளைப் புதுமைப் பொருள் என்பர். விகிர்தபாவமற்ற பரம்பொருளைப் பழம் பொருள் என்பர்.

''முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழபொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே''
(தருவெம்பாவை–9)

என்று கூறுவதை நோக்குக.

சிவபெருமானாகிய புதுப்பொருள் மாணிக்கவாசகருக்குப் பழம்பொருளாகிய பரம்பொருளை உணர்த்திய செய்தியைப் பிடித்தபத்தில்.

''பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமாறு அடியனேற்கு அருளிப்
பூசருன யுகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே.''

என்று கூறுவதை நோக்குக. அந்தப் பூங்கழலைத் திருமூலர் 'குருபாதம்' என்று வழங்குவர். குருபாதமாவது குருவினால் உபதேசிக்கப்பட்ட ஞானம் பதிந்த இடம். (பாதம் – பதிதல்) இக் குரு பாதத்தைப் பாம்பாட்டிச் சித்தர் 'சீர்பாதம்' என்பர்.

பெருந்திரட்டு 'சீர்பாதத்துதி' என்ற தலைப்பில் பல நூல்களில் இருந்து பலபாடல்களை எடுத்துரைக்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேற்கண்ட கருத்துக்களை விளக்கக்கருதி. திருமந்திரத்தை ஆராய்ந்து 'குருபாதம்' என்ற தலைப்பிலும், 'அவமும் சிவமும்' என்ற தலைப்பிலும், இரண்டு கட்டுரைகள் எழுதினேன், திருவாசகத்திலிருந்து 'ஓர் வார்த்தை என்ற தலைப்பில் பூங்கழலைப்பற்றி எழுதினேன்.

இக்கட்டுரைகளுக்கு ஆக்கம் தரும் முறையில் பெருந்திரட்டில் வந்துள்ள திருவாசகப் பாடல்களை எல்லாம் தொகுக்க ஆரம் பித்தேன்.

பெருந்திரட்டு என்னும் நூல் கலைக்கட்டளை என்றும் அநுபவக்கட்டளை என்றும், இரண்டு பிரிவாக உள்ளது. கலைக் கட்டளையைப் பொது என்றும், அநுபவக் கட்டளையை உண்மை என்றும் கூறலாம். கலைக்கட்டளையைவிட அநுபவக் கட்டளையே சிறந்ததாகும். பெருந்திரட்டைத் தொகுத்த சிவப்பிரகாசர் என்பவர் கலைக்கட்டளையில் திருவாசகப் பாடல்களைச் சிலவே எடுத்தாளுகின்றார். ஆனால் அநுபவக் கட்டளையில் மிகுதியான திருவாசகப் பாடல்களைப் பல அநுபவத்தலைப்புகளில் எடுத்து அமைத்துக் கொண்டுள்ளார். இப்பாடல்களை எல்லாம் தனியே தொகுத்து வெளியிட்டால் தமிழ் உலகத்திற்குப் பயன்தரும் என்று கருதி 'திருவாசக அநுபூதி' என்ற பெயரால் இந்நூலை வெளியிடுகின்றேன்.

அநுபூதி என்றால் என்ன:-

அநுபூதி என்றால் அநுபவம் என்று பொருள். கைவல்யம் என்னும் வேதாந்த நூலில் 'சந்தேகம் தெளிதல்' படலத்தில் உள்ள 111ஆவது பாடல், 'சத்து, சித்து, ஆனந்தம்' என்ற மூன்றை விளக்குவதாக அமைந்துள்ளது. அப்பாட்டு சத்தையும் சித்தையும் இன்னது என்று விளக்கிவிட்டு, ஆனந்தத்தை' விளக்கும்போது,

'மகிழ்காமம் நுகர்போது சுகமாகும் அநுபூதி
வாழ்வென்பது ஆனந்தமே'' (111

என்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதன் உரை:-

"விரும்பிய பொருள் கிடைத்து அதனை அநுபவிக்கும்போது, இன்பவடிவமான சாந்தவிருத்தியின்கண் சுகமாய் எழுவதான அநுபூதி வாழ்வே ஆனந்தம் ஆகும்." என்று கூறுகின்றது இதனால் ஒரு பெர்ருளை அநுபவிப்பவரின் அமைதியான எண்ணத்தில் தோன்றும் சுகாநுபவமே அநுபூதியாகும். இது 'சத்து, சித்து, ஆனந்தம்' என்ற மூன்றில் 'ஆனந்தத்தின்' கூறாய் அடங்கும் என்பதை அறிஞர் உணர்வாராக.

மேலே சொல்லியவற்றை எல்லாம் தொகுத்து அச்சிடுவதற்குத் தகுதியாக எழுதி முடித்தவுடன் என் உடல் நலம் குன்றிவிட்டது. சிறுநீர் வரும் பாதையில் சதை வளர்ந்து அடைப்பு ஏற்பட்ட காரணத்தால் இந்த உடல் நலக்குறைவு ஏற்பட்டது என்பதை அறிந்தேன். இதனைச் சரிசெய்து கொள்ள கோயமுத்தூர் சிறந்த இடம் எனக்கருதி, அவ்வூரில் சிறுநீரகத் துறையில் சிறப்பு, வாய்ந்த மருத்துவராகக் கருதப்படும் ஒருவரிடம் பரிசோதிக்கச் சென்றேன். ஆனால் அம்மருத்துவரோ என் முதுமையைக் (91–வயது) காரணம் காட்டி எனக்கு மருத்துவம் செய்வதைத் தவிர்த்து, தம் மருத்துவமனையில் சேர்த்துக் கொள்ளாமலே அனுப்பி விட்டார்.

மேற்கூறப்பெற்ற சூழலில் இறையருள் துணைநிற்க, எங்கள் ஆதீனச்சீடராகிய வெல்லமண்டி கோவை. கு. இராமலிங்கம் அவர்கள் சொற்படி கோவையிலுள்ள "கோவை கிட்னி சென்டர்" (COIMBATORE KIDNEY CENTRE) என்ற மருத்துவ நிலையத்தை அணுகினேன். அம்மருத்துவ நிலையத்தினர் என்னை அன்புடன் சேர்த்துக் கொண்டு நோயின் கடுமையை மேலும் கடுமையாகக் கூறாமல் இதமான சொற்களால் பேசி நல்ல முறையில் அறுவை சிகிச்சைச் செய்து சிறுநீர்ப் பாதையில் உள்ள சதையை நீக்கி என்னைக் காப்பாற்றினர். என்னை மருத்துவமனையில் சேர்த்தது முதல் அறுவை சிகிச்சை-முதலான பல செயல்களை எல்லாம் மிகுந்த அன்புடனும் கருணையுடனும் செய்தவர் டாக்டர் P. திருமலைச்சாமி ஆவர். இவர் சிறுநீரகத் துறையில் சிறந்த மருத்துவராவர். இவரின் மருத்துவத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொண்டால் நான் பிழைக்கப்பட்டேன். எனவே இவரது சிறந்த மருத்துவ முறையைப் பாராட்டி இவர்மேல் பின்வரும் பாடல் ஒன்றைப் பாடி வழங்கினேன்.

"மருத்துவர்க் குள்ளே அமிழ்தமாய் விளங்கும்
மாண்புசேர் திருமலை சாமி
கருத்தெலாம் மக்கள் நலத்தையே கருதும்
களங்கமில் நற்கருத் தாகும்
திருத்தமாய் அவர்தாம் கருத்தினால் வாழ்ந்தோர்
தினம்தினம் கடவுளை நோக்கி
அருத்தியாய் அவர்தாம் வாழ்ந்திடுக என்றே
அனுதினம் போற்றிநிற் பாரே."

என்பது அப்பாடலாகும்.

அன்பு கெழுமிய மருத்துவர் P. திருமலைச்சாமி அவர்கள் எனக்குச் செய்த மருத்துவ உதவி மறக்கமுடியாத ஒன்று என்பதைத் தமிழ் உலகத்திற்கு அறிவித்துக் கொள்கின்றேன்.

மருத்துவப் பரிசோதனைக்காக இரண்டாம் முறை கோவையில் உள்ள அம்மருத்துவ நிலையத்திற்குச் சென்றிருந்த போது, ஒரு அரைநாள் தங்குவதற்காகப் பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் திருமடத்திற்குச் சென்றிருந்தேன். தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளாரும், இளைய பட்டத்து மருதாசல அடிகளாரும், மடத்திலுள்ள ஏனைய அன்பர்களும் என்னை அன்புடன் வரவேற்று மிகச் சிறப்பாக உபசரித்தனர். மேலும், தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் எனக்குக் கதர் ஆடையும் சால்வையும் வழங்கி, தேனில் ஊறிய மிக உயர்ந்த நெல்லிக்கனியைத் தந்து உதவியதோடல்லாமல் ரூபாய் ஐயாயிரத்தையும் (Rs. 5,000) அன்பளிப்பாகக் கொடுத்து உதவினார்கள்.

யான், கோவை மருத்துவ நிலையத்தில் தங்கியிருந்த பொழுது, கோவை இரத்தின சபாபதிபுரம் பொன்னுரங்கம் தெருவைச் சேர்ந்த வெல்லமண்டி கு. இராமலிங்கம் அவர்களின் குடும்பத்தினர்கள் நல்ல பல உதவிகளும் செய்தார்கள். குறிப்பாக கு. இராமலிங்கம் அவர்களின் மூத்தபுதல்வன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திரு. இரா. இளங்கோவன் அவர்களும், அவரது துணைவியார் திருமதி இ. சித்தேசுவரி அவர்களும் மிகச் சிறந்த உதவிகளைச் செய்தார்கள்.

தாரமங்கலத்திலும் ஈரோட்டிலும் வாழ்ந்து வரும் எங்கள் ஆதினச் சிடர்கள் மருத்துவ நிலையத்திற்கு நேரில் வந்து நலம் வினவியதோடு அல்லாமல் மருத்துவமனைச் செலவு முழுவதையும் ஏற்றுக் கொண்டார்கள். மேலும் மருத்துவ நிலையம் சென்றுவர கார் முதலான வாகன உதவிகளையும் செய்தார்கள். இவ்வாறு உதவி செய்தவர்களின் பெயர்களைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

1.	உயர்திரு.	சு. பூபதிராஜன்	தாரமங்கலம்
2.	,,	மா. இளங்கோவன்	,,
3.	,,	காட்டுக்கார அர்த்தநாரி முதலியார்	,,
4.	,,	பெரியசாமி முதலியார்	,,
5.	,,	நாட்டார் எல்லப்பன் முதலியார்	,,
6.	,,	வே. மாரிமுத்து முதலியார்	,,
7.	,,	பாலமுரளி–அருண்மொழி	,,
8.	,,	கு. சந்துரு	,,
9.	,,	ஆ. மோகனசுந்தரம்	ஈரோடு
10.	,,	சக்திபிரிண்டர்ஸ் பாலசுப்பிரமணியம்	,,
11.	,,	ஆ. பழநிசாமி	,,
12.	,,	சிங்காரவேல்	,,
13.	,,	வீ. தங்கமுத்து என்கின்ற நடேசன்	,,
14.	,,	கிருஷ்ணசாமி (தமிழாசிரியர்)	,,
15.	,,	மாரிமுத்து முதலியார்	,,
16.	,,	ச. க. சீனிவாசன்	ஓசூர்
17.	,,	செந்தமிழ்	,,
18.	,,	கு. குருநாதன் (எனது அண்ணார் மகன்)	குகையூர்
19.	,,	கிருஷ்ணமூர்த்தி	,,
20.	,,	அம்பாயிரம் முதலியார்	தோப்பூர் புதுக்குடி
21.	,,	P. பன்னீர்செல்வம் (வேளாண் புலப்பேராசிரியர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)	சிதம்பரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22. உயர்திரு கணேசன் வடமலை
23. ,, டாக்டர் அ. விசுவநாதன் ஆத்தூர்
(எனது குடும்ப மருத்துவர்)

மருத்துவமனையில் நான் தங்கியிருந்த போது எனக்கு உதவியாக எனது இளைய மகன் அ. சிவபெருமானும், மருமகள் சி. மதுரமும், பெயர்த்தி சி. வினாகியும், மருமகன் சி. பாலசித்தனும் உடன் உறைந்து உதவினர். இவர்களேயன்றி எனது குடும்பத்தினர் அனைவரும் உதவினர்.

மேற் குறிப்பிட்ட அனைவரும் யான் செய்து வரும் தமிழ்த் தொண்டின் அருமைகளை உணர்ந்தவர்கள். அவர்கள் என்னை அன்புடன் வைத்துப் பணிவிடை செய்து வருவதால் என்னால் இப்பணிகளைக் கவலையின்றிச் செய்ய முடிகின்றது. ஆதலால் என்னோடு ஒத்துழைத்து உதவிய அனைவருக்கும் எனது நல்வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூல் உருவாக்கம்:

நான் மிகவும் முதுமையடைந்துள்ளேன். அதனுடன் நரம்பு வலுவிழந்த நோயும் ஏற்பட்டுள்ளது. ஆதலால் பிறரைக் கொண்டு இந்நூலை எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. சின்னசேலத்தில் சிவநேசர் மடம் என்னும் மேல மடத்தில் வாழ்ந்து வரும் உயர்திரு. குகநேசன் என்பவரின் புதல்வன் கு. மோகனசுந்தரம் அடிக்கடி வந்து எழுத்துப் பணிகளை மேற் கொண்டு முடித்துக் கொடுத்தார். இவ்வெழுத்துப் பணிக்கு எனது புதல்வன் திரு. அ. சிவபெருமானும் அவ்வப்போது உதவியுள்ளார்.

நூல் வெளியிட கிடைத்த நிதி:

தவத்திரு. பேரூர் அடிகளார் அவர்கள் எனக்கு அன்பளிப்பாக வழங்கிய ரூபாய் ஐயாயிரத்தையும், தாரமங்கலம் சீடர் திரு. சு. பூபதி அவர்கள் அன்பளிப்பாக வழங்கிய ரூபாய் ஐயாயிரத்தையும் முதலீடாக வைத்துக் கொண்டு இந்நூலை அச்சிட்டு வழங்கியுள்ளேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அச்சகப்பணி:

வழக்கம் போல் என்னுடைய நூல்களைப் பதிப்பாசிரியராக அமர்ந்துபதிப்பித்துவரும் எனதுஇளையமகன் அ.சிவபெருமானை அழைத்துக் கையெழுத்துப் பிரதியை வழங்கி நல்லமுறையில் அச்சிட்டுத் தமிழுலகத்திற்கு வழங்குமாறு ஒப்புவித்தேன். அவரும் அப்பிரதிகளை ஆர்வமுடன் பெற்றுத் திருத்தமான அச்சுக்காப்பியைத் தயார் செய்து அதை என்னிடம் படித்துக் காட்டி அச்சேற்றினார். மேலும், அச்சகம் சென்று மெய்ப்பு, அட்டை முதலானவற்றை ஒழுங்கு செய்து தம் கடின உழைப் பால் பதிப்பித்து வழங்கியுள்ளார்.

மாரியப்பா நகர் புலவர் இரா. கணபதி அவர்கள் என்பால் பற்றுக் கொண்டு உடனுக்குடன் மெய்ப்புக்களைத் திருத்தி உதவினார். மேலும், இந்நூலை மிக ஆர்வமுடன் அச்சிட்டு வழங்கியவர்கள் சுபம் அச்சக உரிமையாளர்களாகிய திரு. தட்சிணாமூர்த்தியும் திரு. குருசாமியும் ஆவர். இந்நூலின் முகப்பு அட்டையிலுள்ள ஓவியத்தை வரைந்தளித்தவர் சிதம்பரம் நகரைச் சேர்ந்த ஓவியர் சேது ஆவர். இவ்வாறு இந்நூல் உருவாக்கத்திற்கு உதவிய மேற்கூறிய அனைவரையும் நன்றாக வாழ்த்தி எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

இங்ஙன்,

15—12—2000 திரு. அடிகளாசிரியன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
இறைவன் துணை

1. குருபாதம்

வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே - சீரார்
திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி.

(திருவாசகம், திருவெண்பா, 7)

'குருபாதம்' என்ற தலைப்பில் இக்கட்டுரை எழுதப் படுகின்றது. அக்குரு பாதத்தை அடைவதற்குரிய செய்தியைத் திருமூலர் 'குருநெறி' என்ற தலைப்பில் கூறியுள்ளார். அவர் அக்குருநெறியைப் பின்வரும் இரண்டு பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் முதற்பாடல் வருமாறு:

திருநெறி யாவது சித்துஅசித்து அன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாம்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே. (54)

மேற்பாட்டால் திருமூலர் தாம் கூறும் திருநெறி என்பது எத்தகையது என்பதை விளக்குகின்றார்.

திருநெறியாவது, "குருநெறியாம் சிவமா நெறி கூறும் ஒரு நெறி" என்பது அவர் சொல்லுகின்ற விளக்கமாகும். இங்கே குருநெறி என்பது குருபாத நெறியாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேற்கண்ட பாட்டின் பொழிப்புரை:

திருநெறி என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதாவது, ''சித்தாகிய உயிர் அசித்தாகிய மாயையில் முன்னே. பொருந்தி இருத்தல் அன்றி, பின்னர் பக்குவம் வந்த பிறகு பெருநெறிக்கு உரித்தாகிய தத்பதப் பொருளாகும் பிரான் என்னும் பரனை நினைந்து, அதன் பின்னர் அசிபதப் பொருளாகிய குருநெறியாம் சிவமாநெறியைச் சேரும் ஒரு நெறி என்க. இந்த நெறியையே, தத்துவம் அசி என்னும் வேதாந்த மகா வாக்கியம் ஒன்றாகக் கூறும்'' என்றவாறு.

இரண்டாவது பாடல்:

சைவச் சமயத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துவைத் தானே. (1478)

இப்பாட்டின் பொழிப்புரை:

''சைவ சமயத்துக்கு ஒப்பற்ற தலைவனாக விளங்கும் நந்தியும் பெருமான் மக்களெல்லாம் அறிந்து உய்யுமாறு வகை செய்து அளித்த குருநெறி என்ற பெயருடைய திருநெறி ஒன்றுண்டு. அக்குருநெறி தெய்வச் சிவநெறி யாகும். அந்நெறியைப் பின்பற்றி மக்களெல்லாம் சன்மார்க் கத்தில் சேர்ந்து உய்யும்படி உலக மக்களுக்குத் *துவாதச மார்க்கமாக* வகுத்துரைத்தான்'' என்றவாறு.

மேற்கூறிய இரண்டு பாடல்களும் குருபாதம் பற்றிய வரலாற்றுச் செய்திகளை நமக்குத் தெரிவிக்கின்றன.

இதனை, *''சைவ சமயத் தனிநாயக நந்தி உய்ய வகுத்த குருநெறி''* என்றும், அதுவே திருநெறி, பெருநெறி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குருநெறி, தெய்வச்சிவநெறி, சன்மார்க்க நெறி என்றெல்லாம் பேர்பெறும் என்பதையும் உணர்ந்து கொண்டோம்.

''வேதாந்தம் ஓதுமே'' (54) என்றதனால் 'தத்துவமசி' என்னும் வேதாந்த மகாவாக்கியத்தால் ஆராயப்படும் என்னும் செய்தி நமக்குக் கிடைக்கின்றது.

சிவந்த குரு வந்து செப்பினார்:

இசைந் தெழும் அன்பில் எழுந்த படியே
பசைந் தெழும் ஈசரைப் பாசத்துள் ஏகச்
சிவந்த குருவந்து சென்னிகை வைக்க
உவந்த குருபதம் உள்ளத்து உவந்தே. (1590)

மேற்கண்ட பாட்டு, குருநெறியால் உணர்த்தப்படும் குருபாதத்தை, ''*சிவந்த குரு வந்து செப்பினார்*'' என்று கூறும்.

இப்பாட்டில் வந்துள்ள சிவந்த குரு என்பதற்குச் சிவப்பு நிறமுடைய குரு என்று பொருள் கொள்ளக் கூடாது. சிவத்தன்மை பொருந்திய ஆசிரியன் என்னிடம் வந்து தன்னுடைய கையை என்னுடைய தலையின்மேல் வைத்து மகாவாக்கிய உபதேசம் செய்ய, அதனால் என் உள்ளத்தில் நான் விரும்பிய குருபாதம் வந்தது என்பது பொருளாகும்.

''சிவம்'' என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தசொல் சிவந்த என்ற பெயரெச்சமாகும்.

வேதாந்த மகா வாக்கிய ஆராய்ச்சி நான்கு வகைப் படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்று, துவம்பதத்தைச் சீவனாகிய தன்னில் வைத்து ஆராய்ந்து தன்னை உணர்வது.

இரண்டாவது, தன்னை இயக்கும் பரனை தத்பதத்தில் வைத்து ஆராய்ந்து பரதுரியத்தை உணர்வது.

மூன்றாவது, சீவனாகிய தனக்கும், தன்னை இயக்கும் பரனுக்கும், அடியாகிய சிவத்தை அசிபதத்தில் வைத்து ஆராய்ந்து அச்சிவனைத் தானாகப் பாவித்து உணர்வது.

நான்காவது, சீவதுரியம், பரதுரியம் என்ற இரண்டின் உள்ளீடான கண்ட சிவத்தையும், அசிபதப் பொருளாகிய சிவதுரியம் என்னும் அகண்ட சிவத்தையும் விட்டுவிடாத இலக்கணையால் ஒன்றாகக் கூட்டி; ஒன்றாகக் கூடிய சொரூப சிவத்தை உணர்ந்து மௌன சமாதியில் நிற்றல் ஆகும். *இந்த நான்காவது நிலைக்குத்தான் குருபாத நிலை என்று பெயராகும்.* இக்கருத்தை உணர்த்தும் திருமந்திரப் பாடலைக் கீழே காண்க.

ஞானச் சமயமே நாடும் தனைக்காண்டல்
ஞான விசேடமே நாடும் பரோதய
ஞானநிர் வாணமே நற்சிவோ கம்பாவம்
ஞானாபி டேகமே நற்குரு பாதமே (1476)

இப்பாட்டின் பொழிப்புரை

ஞான சமயத்தின் சமய தீட்சையாவது தத்துவமசி ஆராய்ச்சி செய்து துவம்பதப் பொருளாகிய சீவதுரியத்தைக் காண்பதாகும். ஞானநெறியின், விசேட தீட்சையாவது தத்பதி ஆராய்ச்சி செய்து தத்பதப் பொருளாகிய பரதுரியத்தை உணர்தலாம். ஞான சமயத்தில் நிர்வாண தீட்சையாவது அசிபத ஆராய்ச்சி செய்து சிவதுரியத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உணர்ந்து அச்சிவ துரியத்தைத் தானாகக் கருதிச் சிவோகம் பாவனை செய்தலாம். ஞான சமயத்தில் அபிடேக தீட்சையாவது மூன்று துரியத்துள்ளும் உள்ள சிவத்தை ஒன்றாக்கிக் கொண்ட குருபாத நிலையைப் பெறுவது'' என்றவாறு.

அக்குருபாத நிலையைக் கீழ்வரும் பாட்டொன்றால் திருமூலர் கூறுகின்றார்.

துரியங்கள் மூன்றும் கடந்தொளிர் சோதி
அரிய பரசிவம் யாவையும் ஆகி
விரிவு குவிவற விட்ட நிலத்தே
பெரிய குருபதம் பேசவொண் ணாதே. (2657)

மேற்பாட்டு திருமந்திரம் ஒன்பதாம் தந்திரத்துள் ''ஞானகுரு தரிசனம்' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

மகாவாக்கிய ஆராய்ச்சிசெய்து அதன் முடிவாகக் கிடைக்கும் குருபாத தரிசனத்தைக் கூறுவதால் 'ஞான குரு தரிசனம்' என்ற பெயரைப் பெற்றது.

பக்குவமுள்ள ஒருவன் தத்துவமசி என்னும் மகாவாக்கியத்துள் சிவ பதமாகிய துவம்பதத்தை ஆராய்ந்து சீவதுரியத்தையும், பரபதமாகிய தத்பதத்தை ஆராய்ந்து பரதுரியத்தையும், நேரிழையாள்பதம் என்னும் அசிபதத்தை ஆராய்ந்து சிவதுரியத்தையும் உணரவேண்டுமென்க.

இந்த மூன்று ஆராய்ச்சிக்குப்பின் சீவதுரிய சிவத்தையும், பரதுரிய சிவத்தையும், அசிபதச் சிவமாகிய கணுவொன்றிலாத சிவத்தையும் கூட்டி ஒரே சிவமாகக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருதுதல் குருபாத நிலையாகும். இக்குருபாத நிலையைக் கருதி அறிஞர் மௌன சமாதியில் இருப்பர்.

மேற்கண்ட திருமந்திரப் பாட்டின் (2657) விரிவான பொருள் வருமாறு:

துரியங்கள் மூன்றும் கடந்தொளிர் சோதி

துவம்பதத் துரியமாகிய சீவதுரியமும், தத்பதத் துரிய மாகிய பரதுரியமும், அசிபதத் துரியமாகிய சிவதுரியமும் ஆகிய இவற்றின் நிலையைக் கடந்து நான்காம் நிலையாய் விளங்குகின்ற ஒன்றுபட்ட சோதி.

அரிய பரசிவம்

இச்சோதியை நுணுகி ஆராயும் அரிய நிலையை யுடைய பரசிவம் ஆகும்.

விரிவு குவிவற வீட்ட நிலத்தே யாவையுமாகிய பெரிய குருபதம்

நிலம் இரண்டு வகையினை உடையது. ஒன்று விரிவு குவிவுக்களை உடைய நிலம். மற்றொன்று, விரிவு குவிவுகள் நீங்கிய நிலம். விரிவு குவிவுகளை உடைய நிலமாவது; மாயையாகிய நிலம் என்க. அம்மாயைப் பிரகிருதி மாயை என்றும், வியோமமாகிய அசுத்தமாயை என்றும், உபசாந்த மாகிய சுத்தமாயை என்றும் மூன்று விதமாய் இருக்கும். அவற்றுள், பிரகிருதி மாயையானது சீவனுக்கு உரிய தாகையால், சீவசுழுத்தி, சீவகனவு, சீவநனவு என விரிந்தும், பின் சீவநனவிலிருந்து சீவகனவு, சீவசுழுத்தி யாகிக் குவிந்து வரும்.

அதனைப் போலவே வியோமமாகிய அசுத்தமாயையும், அது இயக்கும் பரனுக்கு இடமாகையால் பரசுழுத்தி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரகனவு, பரநனவு, என விரிந்தும், பின், பரநனவிலிருந்து பரகனவு, பரசுழுத்தியாக்க குவிந்தும் வரும்.

அதனைப் போலவே உபசாந்தமாகிய சுத்த மாயை, சிவனுக்கு உரியதாகையால், சிவசுழுத்தி, சிவகனவு, சிவநனவாக விரிந்தும், பின் சிவநனவிலிருந்து சிவகனவு, சிவசுழுத்தியாகிக் குவிந்தும் வரும்.

மேலே சொன்ன இவற்றைத்தான் திருமூலர் விரிவு, குவிவு என்று கூறுகின்றார்.

வடநூலார் மாயை என்கின்ற ஒன்று விரிவாகிய விகாசத்தையும், குவிவாகிய சங்கோசத்தையும் உடைய தென்பர். அந்த விகாச சங்கோசங்களைத் திருமூலர் அழகான தமிழ்ச் சொல்லால் *'விரிவு' 'குவிவு'* என்று கூறுகின்றார். இங்கே 'விரிவு' என்பது விகாசத்தையும், 'குவிவு' என்பது சங்கோசத்தையும் குறிக்குமென்க.

குருபாதம் என்பது மூன்று மாயைகளையும் கடந்த வெட்டவெளி (அ) பரவெளியாகிய நிலத்தில் இருப்பதா கையால் *விரிவு குவிவறவிட்ட நிலத்தே பெரிய குருபதம்* என்றார்.

பேச ஒண்ணாதே

குருபாத நிலையாகிய சொரூப நிலையைச் சித்தத்தில் வைத்துக் கொண்டால் எந்தப் பேச்சும் இல்லை, அதனையே கருதிப் பேச ஒண்ணாததாகிய மௌன சமாதியில் அறிஞர் இருப்பர்.

பதஞ்சலி யோக சூத்திரம் சித்தத்திற்கு ஐவகை நிலைகளைக் கூறும். ஒன்று, ஒன்றையும் அறியாது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருக்கும் மூடநிலை. இரண்டு, உலக நிலைகளை அறிந்து வரும் கூடிப்த நிலை. மூன்று, அறிந்தும் அறியாமலும் இருக்கும் வீக்ஷிப்த நிலை. நான்கு, ஒன்றுபடும் நிலை யாகிய ஏகாக்கிர நிலை. ஐந்து, பேச்சற்ற நிலையாகிய நிருத்தநிலை; இதனையே திருமூலர் மௌனநிலை என்பர்.

குருபாத நிலையைக் கருதி மௌன நிலையில் இருத்தல் நிருத்தநிலை என்க.

திருமூலர் குருபாதமாகிய சிவ சொரூப தரிசனத்தைப் பின்வரும் பாடல்களிலும் குறிப்பிட்டுள்ளார். அப்பாடல்கள் வருமாறு.

துரியங்கள் மூன்றும் கடந்தொளிர் சோதி
அரிய துரியம் அதில்மீது மூன்றாய்
விரிவு குவிவு விழுங்கி உமிழ்ந்தே
உரையில் அநுபூ திகத்தினுள் ளானே (2940)

தோன்ற அறிதலும் தோன்றல் தோன்றாமையும்
மான்ற அறிவு மறிநன வாதிகள்
மூன்றவை நீங்கும் துரியங்கள் மூன்றற
ஊன்றிய நந்தி உயர்மோனத் தானே. (2661)

குறிப்பு:

தோன்ற அறிதல் என்பது நனவு. தோன்றல் தோன் றாமை என்பது கனவு. மான்ற அறிவு என்பது சுழுத்தி.

உரையற்று உணர்வற்று உயிர்பரம் அற்றுத்
திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்துக்
கரையற்ற சத்தாதி நான்கும் கடந்த
சொரூபத்து இருத்தினன் சொல்லிறந் தோமே.(1593)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறிப்பு:

இப்பாட்டில், 'சத்தாதி நான்கும் கடந்த சொரூபம்' என்பது குருபாத நிலையை. சத்தாதி நான்காவது சத்தியம், ஞானம், அனந்தம், ஆனந்தம் என்கின்ற முச்சொரூப நிலையை என்க.

ஓதும் மயிர்க்கால் தோறும்அமு தூறிய
பேதம் அபேதம் பிறழாத ஆனந்தம்
ஆதி சொரூபங்கள் மூன்றகன்று அப்பாலை
வேதம் ஓதும் சொரூபிதன் மேன்மையே. (2856)

குறிப்பு:

இப்பாட்டில் 'வேதம்' என்றது தத்துவமசி மகா வாக்கியத்தைக் குறிக்கும். 'சொரூபி' என்றது குருபாதத்தைக் குறிக்கும்.

சத்திய ஞானத் தனிப்பொருள் ஆனந்தம்
சித்தத்தின் நில்லாச் சிவானந்தப் பேரொளி
சுத்தப் பிரம துரியம் துரியத்துள்
உய்த்த துரியத்து உறுபே ரொளியே (2860)

குருபாதத்தைக் குறிக்கும் பிறநூல்கள்

மெய்ம்மொழி என்கின்ற ஒருநூல் நான்காம் நிலையாகிய குருபாத நிலையைச் சுயம்பிரகாசநிலை என்று கூறும். இதனை உணர்த்தும் பபடல் வருமாறு:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மத்த மாம்புலன் மாறிய இடத்தே
மன்னுயிர் வெளிப்படும் அதுபோய்ம்
பெத்த மாமுயிர் மாறிய இடத்தே
பெரும்பரன் வெளிப்படும் அதுபோய்
அத்த மாம்பரம் மாறிய இடத்தே
அருஞ்சிவம் வெளிப்படும் அதுபோய்ச்
சுத்த மாம்சிவம் மாறிய இடத்தே
தோன்றும்நல் சுயம்பிர காசம்.

பதினெண் சித்தர் நூல்களில் மதுரை வாலைச் சாமியார் இயற்றிய *''ஞானக்கும்மியின்''* கடைசிப் பகுதியில்,

''பழுதிலாத சொரூபருக்குக் குருவுடை
பாதம் இதல்லவோ ஞானப் பெண்ணே''
(ஞானக்கும்மி-175)

என்ற பாடல் சொரூப நிலைக்குக் குருபாதம் என்கின்ற பெயர் உண்டு என்று கூறுகின்றது.

சேஷயோகியார் இயற்றிய ஞான ஏற்றத்தில்,

''மூப்பாழும் கடந்து அப்பாலே நடந்தால்
அதிசயம்பார் அத்தான் நல்லகுரு பாதம்
நாற்பதுசால் எட்டாம்'' (ஞானஏற்றம்)

என்னும் பகுதியை நோக்கினால், மூப்பாழுக்கு அப்பால் உள்ளது குருபாத நிலை என்பது விளங்கும்.

சித்தர் பாடல்களில் பாம்பாட்டிச் சித்தர் இக்குரு பாதத்தைச் *சீர்பாதம்* என்று கூறுகின்றார். இதனை உணர்த்தும் பாடல் வருமாறு:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களிமண்ணி னால்ஒரு கப்பல் சேர்த்தே
கனமான பாய்மரங் காண நாட்டி
அளிபுலந் தன்னையே சுக்கா னாக்கி
அறிவென்னும் ஆதாரச் சீனி தூக்கி
வெளியென்னும் வட்டத்தே யுள்ள டக்கி
வேதாந்தக் கடலினை வெல்ல வோட்டித்
தெளிவுறு ஞானியார் ஓட்டுங் கப்பல்
சீர்பாதம் சேர்ந்தது என்று ஆடுபாம்பே.
(அகப்பற்று நீக்கல்-114)

இதுகாறும், திருமூலர் கூறிய குருபாதத்தை இத்தகையது என, உணர்ந்தோம். மேலும், தமிழ்நாட்டுச் சித்தர்கள் அக்குருபாதத்தை எவ்வாறு கூறியுள்ளனர் என்பதையும் தெரிந்து கொண்டோம். இனி, தவத்திரு மாணிக்க வாசக சுவாமிகள் இக்குரு பாதத்தை எவ்வெவ்வாறு கூறுகின்றார் என்பதை ஆராய்வோம். அவ்வாறு ஆராய்வதற்குமுன் திருமூலர் கருதும் ''அவமும் சிவமும்'' என்ற இரண்டு பொருள்களைப் பற்றித் தெளிவோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. அவமும் சிவமும்

திருந்தனர் விட்டார் திருவில் நரகம்
திருந்தனர் விட்டார் திருவார் சுவர்க்கம்
திருந்தனர் விட்டார் செறிமலக் கூட்டம்
திருந்தனர் விட்டார் சிவமாய் அவமே (2339)

மேற்கூறிய பாட்டு திருமந்திரம் எட்டாம் தந்திரத்துள் நின்மலாவத்தை என்ற தலைப்பில் உள்ளது.

பலவற்றை நீங்கி சிவத்தைப் பெறுதலே நின்மலா வத்தை என்ற செய்தியை இப்பாட்டு அறிவுறுத்துகின்றது. இப்பாட்டின் பாடம் *'திருந்தினர்'* என்ற வடிவில் இருந்தால் நன்றாய் இருக்கும்.

திருமூலர் காலத்தில் திருந்தினர் என்ற சொல் திருந்தனர் என்று வழங்கிற்றுப் போலும். அல்லது எழுதியவர் பிழையாக எழுதிவிட்டார் போலும். இது ஆராய்ச்சிக்கு உரியது. ஆனால் இப்பாட்டு,

''திருந்தினர் விட்டார் திருவில் நரகம்
திருந்தினர் விட்டார் திருவார் சுவர்க்கம்
திருந்தினர் விட்டார் செறிமலக் கூட்டம்
திருந்தினர் விட்டார் சிவமாய் அவமே''

என்ற பாடபேதத்தில் இருந்தால் நன்றாய் இருக்கும்.

ஔவையாரும் ஆத்திசூடியில் *''செய்வன திருந்தச் செய்''* என்று சுருக்கமாகக் கூறியுள்ளார். செயல்களைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருந்தச் செய்வதால் உண்டாகும் பயனை இத்திருமந்திரம் கூறுகின்றது.

இப்பாட்டின் பொருள்:

''திருந்திய செயலை உடையவர் 'திரு' இல்லாத நரகத்தை விட்டவர் ஆவர். திருந்திய செயலை உடையவர் புண்ணியமாகிய திருவினால் வாழ்கின்ற சுவர்க்க உலகத்தையும் விட்டவர் ஆவர். திருந்திய செயலை உடையவர் ஆணவம், கன்மம், மாயை என்கின்ற செறிந்த மலக் கூட்டத்தையும் விட்டவர் ஆவர். திருந்திய செயலை உடையவர் சிறந்த சிவப்பேற்றைப் பெற்றவராகி அவப்பேற்றை விட்டவராவர்'' என்பது பொருளாகும்.

எனவே, ஒருவன் திருந்தியவனாய் இருந்து நரக, சுவர்க்க மலக்கூட்டங்களை விட்டு அவற்றுடன் அவப் பேற்றையும் விட்டு, சிவப்பேற்றை அடைதலே நின் மலாவத்தை என்பதாகும்.

ஆகவே, ஒருவன் தீவினையால் நிகழும் நரகத்தையும், புண்ணியத்தால் கிட்டும் சுவர்க்கத்தையும், ஆணவம் முதலான மலக்கூட்டங்களையும், அவப்பேற்றையும் விட்டு நீங்கினால் சிவப்பேற்றைப் பெறலாம் என்பதாயிற்று.

''அவமும் சிவமும் அறியார் அறியார்
அவமும் சிவமும் அறிவார் அறிவார்
அவமும் சிவமும் அருளால் அறிந்தால்
அவமும் சிவமும் அவன்அரு ளாமே''

(திருமந்திரம் 23)

என்ற இப்பாட்டு சிவத்தை அருளால் அறிக என்ற செய்தியைக் கூறுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதன் பொருள்:

''அறியாதவர் அவம் இன்னது சிவம் இன்னது என்று அறியாதவராய் இருப்பர். அறியும் அறிவுடையார் அவம் இத்தகையது, சிவம் இத்தகையது என்பதை அறிந்து கொள்வர். அறிவுடையவர் இருவருள் அறிவை மேற் கொண்டு அவத்தையும் சிவத்தையும் இன்னன என்று அறிந்தால் அவப்பொருளும் சிவப்பொருளும் அவன் அருளால் வணங்குவதாய் இருக்கும் என்பர்.''

எனவே, பயன் தராத அவப்பொருளையும் பயன்தரும் சிவப்பொருளையும் உள் உணர்வாகிய அருள் அறிவால் உணர்ந்து தெளிக என்றதாம். இனிப்பயன் தராத அவப் பொருளை நீக்கிப் பயன்தரும் சிவப்பெருளை அறிக என்றதாயிற்று.

''சிவமாதல் வேதாந்த சித்தாந்தம் ஆகும்
அவம்அவம் ஆகும் அவ்வவ் இரண்டும்
சிவமாம் சதாசிவன் செய்தொன்றான் ஆனால்
நவமான வேதாந்த ஞானசித் தாந்தமே'' (2393)

மேற்பாட்டு திருமந்திரம் எட்டாம் தந்திரத்துள் *'ஆறு அந்தம்'* என்ற தலைப்பில் வந்துள்ளது. இப்பாட்டு, துவம்பத தத்பத ஆராய்ச்சி செய்து அவற்றிற்குரிய சீவனும் பரனும் தமக்குள் ஒன்றுதல் சிறப்பில்லை என்பதையும் அவ்வாராய்ச்சிக்குமேல் அசிபத ஆராய்ச்சியை யும் செய்து அசிபதத்துக்குள்ள சிவத்துடன் சீவனும் பரனும் ஒன்றுதலே சிறந்த சாயுச்சியமாகும் என்பதையும் கூறுகின்றது.

தத்துவமசி மகாவாக்கிய ஆராய்ச்சி இருவகையாக உள்ளது. ஒரு சாரார் சீவன், கூடத்தன். ஈசுவரன். பிரமம் என்னும் நான்கு அறிவுப் பொருள்களை வேதாந்த நூல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களால் ஆராய்ந்து துணிந்து கொண்டு, சீவனும் கூடத் தனும் சீவனுக்கு உரியவையாதலால் தத்துவமசி மகா வாக்கியத்துள் துவம்பதத்தில் வைத்தும், ஈசன், பிரமம் என்னும் இரண்டும் ஈசனைப் பற்றியதாகையால் இவற்றைத் தத்பதத்தில் வைத்தும் ஆராய்ந்து சீவன் கூடத்தனுடைய பிரதிபிம்பப்பொருள் என்று கருதி சீவனைக் கூடத்தனில் அடக்கியும், ஈசுரனைப் பிரமத்தின் பிரதிபிம்பப் பொருளாகக் கருதி அவனைப் பிரமத்தில் அடக்கியும், மேலே சொன்ன நான்கைக் கூடத்தன் பிரமம் என இரண்டு பொருளாக்கிக் கொண்டு, கூடத்தன் குடாகாயம் போன்றவன் என்றும், பிரமம் பெரிய ஆகாயம் போன்றதென்றும் கருதிக் கொண்டு, குடம் உடைந்தால் குடாகாயம் பெரிய ஆகாயத்தில் கூடி ஒன்றாவது போல துவம்பத இலட்சியப் பொருளாகிய கூடத்தன் தத்பத இலட்சியப் பொருளாகிய பிரமத்துடன் மகாவாக்கியத்துள் 'அசி' என்னும் கிரியாபதத்தாலே ஒன்றுபட்டு ஐக்கிய மாகும் என்றும் கொள்ளும் முறையென்க, இவ்ஐக்கியம் குடாகாயம், மகாகாயம் என்னும் ஒரு பொருளின் ஐக்கிய மாகையால் இதனைக் கேவலாத்துவிதம் என்பர்; இது ஒரு சாரார் கொள்கையாகும்.

திருமூலர் போன்ற மற்றொரு சாரார் கொள்கை, மேற்கண்ட ஒருசாரார் கொள்கைக்கு மாறுபட்டதாகும். திருமூலர் முதலியோர், இயங்குகின்ற சீவனும் இயக்கு கின்ற ஈசனாகிய பரனும் இவ்விரண்டிற்கும் அடியாகிய சிவம் என்னும் பிரமமும் என்று மூன்று அறிவுப் பொருள் களை வேதாந்த நூல்களில் இருந்து ஆராய்ந்து தெளிந்து கொண்டு, பின்னர் அம்முப்பொருள்களுள் சீவனைத் துவம்பதப் பொருளாகவும், ஈசனாகிய பரனைத் தத்பதப் பொருளாகவும் அமைத்துக் கொண்டு முன்னே துவம்பத

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆராய்ச்சியைச் செய்து சீவதுரியத்தை விட்ட இலக்கணையால் அறிந்தும், பின்னர் தத்பத ஆராய்ச் சியைச் செய்து பரதுரியத்தை அறிந்து அப்பரதுரியத்துள் சீவன் அடங்கியிருத்தலை, விடாத இலக்கணையால் அறிந்தும், பின் அசிபத ஆராய்ச்சியைச் செய்து சிவதுரியத்தை அறிந்து அச்சிவதுரியத்துள் சீவனுடன் கூடிய பரதுரியத்தை அடக்கி, சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் என்னும் மூன்று துரியத்தும் உள்ள அதிசூக்கு மப்பொருளாகிய சிவத்தை விட்டுவிடாத இலக்கணையால் அறிந்து, அறிந்த அந்த ஒன்றாகிய சிவத்தையே சிவோகம்பாவனை செய்து மௌன சமாதியில் இருக்க வேண்டும் என்பர். இவர் நெறி சீவதுரியமும், பரதுரியமும், அசிபதப் பொருளாகிய அகண்ட சிவமும் ஒன்றாகிய தாதலின் பாலானது சர்க்கரையுடன் சேர்ந்து பின்னர் தேவாமிர்தத்துடன் கூடினாற் போன்றது என்க. இது விசிட்டாத்துவைதம் ஆகும்.

மேலே சொன்ன இரண்டு ஐக்கியங்களையும் நன்றாகக் கருதித் தெளிந்து கொண்டு மேலே கண்ட பாட்டிற்குப் பொருள் காண முயல வேண்டும்.

பாட்டின் முதலடி

சிவம் ஆதல் வேதாந்த சித்தாந்தம் ஆகும்:-

துவம்பத, தத்பத ஆராய்ச்சிகளுடன் அசிபத ஆராய்ச்சியையும் செய்து சிவம்ஆதலே சிறந்த வேதாந்த சித்தாந்தமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரண்டாமடி

அவம் அவம் ஆகும் அவ்வவ் இரண்டும்:

மற்று, துவம்பத, தத்பத ஆராய்ச்சிகளை மட்டும் செய்து அவற்றிற்குரிய சீவனும் பரனும் தமக்குள் ஒன்று வதாகக் கொள்வது அவநெறி, அவநெறி ஆகும் என்க.

சிவமாம் சதாசிவன் செய்தொன்றான் ஆனால்
நவமான வேதாந்த ஞானசித் தாந்தமே''

மேற்கூறப்பட்ட மூன்றாம் அடிப்பொருளையும், நான்காம் அடிப்பொருளையும் அறிஞர் நுணுகி உணர வேண்டும்.

நவம் என்பது சீவதுரியத்தை ஆராய்தற்குரிய முன்று அவத்தை, மூன்று அபிமானிகள்; பரதுரியத்தை ஆராய்தற்குரிய மூன்று அவத்தை, மூன்று அபிமானிகள்; சிவதுரியத்தை ஆராய்தற்குரிய மூன்று அவத்தை மூன்று அபிமானிகள் என ஒன்பதைக் குறிக்கும்.

நவமான வேதாந்த ஞானசித்தாந்த ஆராய்ச்சியால் சிவமாகின்ற சதாசிவ தத்துவம் தோன்றும் என்க. அத்தத்துவத்தில் ஒன்றாமல் துவம்பத, தத்பத ஆராய்ச்சி மட்டும் செய்து அவற்றுடன் ஒன்றுவதாகக் கொள்ளுவதே அவநெறியாகும் என்க.

இப்பாட்டின் திரண்ட கருத்து:

ஒன்பான் அவத்தை, ஒன்பான் அபிமானிகளைக் கொண்டு ஆராயும் ஞானசித்தாந்தத்தைக் கொண்டு, சிவமாகும் சதாசிவத்தோடு ஒருவன் ஒன்றானாகில் அவ்வவ் இரண்டும் அவமாகும் என்பது கருத்தாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனவே, இப்பாட்டு *அவநெறியையும் சிவ நெறியையும்* உணர்த்துகின்றது என்பதை அறிஞர் கருதி உணர்க. இப்பாட்டின் கருத்தை,

''பாலும் அமுதமும் தேனுடனாம் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்து உள்ளங்கொண்ட பிரான்குரை கழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ''

(திருப்பூவல்லி-11)

என்ற இத்திருவாசகப் பாடலால் அறிக. இப்பாட்டின் விளக்கத்தை மற்றோர் இடத்தில் காண்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. திருவாசகத்துள் ஓர் வார்த்தை

தோற்றுவாய்:

தமிழ்நாட்டுப் பழைய சமயச் சான்றோர்களுள் திரு மூலரும், மாணிக்கவாசகரும், நம்மாழ்வாரும், ஒத்த கருத்துடையவர் என்பது என் கருத்தாகும். அவருள் திருமூலர் மூன்று அறிவுப் பொருளைக் கருதியவர் என்பது *'சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்'* (திருமந்திரம்-76) என்று அவர் கூறும் கூற்றால் நமக்குத் தெரிகின்றது.

மாணிக்கவாசகரும் மூன்று அறிவுப் பொருளைக் கருதியவரா என்ற செய்தியை நாம் ஆராய்ந்து தெளிய வேண்டும். மாணிக்கவாசகர் செத்திலாப்பத்தின் இரண்டாம் பாட்டில்,

'மன்ன என்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றினாய்'

என்று கூறுகின்றார்.

இதில் வந்துள்ள 'ஓர் வார்த்தை' எது என்பது பற்றி நாம் ஆராய வேண்டும். திருவாசகத்தைப் பதிப்பித்தவருள் ஒருவராகிய திரு. தண்டபாணிதேசிகர் அவர்கள் 'ஒரு வார்த்தை' என்பது 'பிரணவ பஞ்சாக்கரம்' என்பர். ஓங்காரத்தோடு கூடிய பஞ்சாக்கரத்தை 'பிரணவ பஞ்சாக்கரம்' என்று அறிஞர் வழங்குவர்.

திரு. சித்பவாநந்தர் அவர்கள் தம் திருவாசகப் பதிப்பின் குறிப்பில் *'ஒரு வார்த்தை'* என்பது *மகாவாக்கியம்* என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவஞான முனிவர் கருத்து:

சிவஞான போத மாபாடியம் சிறப்புப் பாயிர உரையுள் சிவஞான முனிவர், 'பெரும் பெயர்க் கடவுள்' என்னும் பாயிரப் பகுதிக்கு உரை கூறுங்கால், ''பெரும் பெயர்க் கடவுளெனஞேயம் ஒன்றே பெரும் பெயர்க்குப் பொருளாகக் கூறினார்; ஏனையவற்றைத் தன்னுள் அடக்கி நிற்றலில் தலைமை பற்றிக் கூறிற்று என்று உணர்க. பெரும் பெயர் எனினும் மகாவாக்கியம் எனினும் ஒரு வார்த்தை எனினும் ஒக்கும் என்பர்.''

பெருந்திரட்டு முதலான நூல்களின் கருத்து:

பெருந்திரட்டிலும், தாயுமானவர் பாடல் முதலான வற்றிலும் ஒரு வார்த்தை, ஒரு சொல், ஒரு மொழி என்ற சொற்கள் வழங்கப்படுகின்றன. அங்கே இச்சொற்கள் மகாவாக்கியத்தையே குறிக்க வந்துள்ளன.

திருமூலர் கருத்து:

திருமூலர் முப்பொருள் ஆராய்ச்சியில் தத்துவமசி மகாவாக்கியத்தையும், பஞ்சாக்கரத்துள் மூன்று எழுத்துக் களையும் எடுத்தாளுகின்றார். அவர் கூற்றின்படி இங்கு ஒரு வார்த்தை என்பது மகாவாக்கியத்தையும் குறிக்கும். பஞ்சாக்கரத்தையும் குறிக்கும்.

தத்துவமசி மகாவாக்கியம் சாமவேதத்தில் கூறப் பட்டுள்ளது. பஞ்சாக்கரம் யசுர் வேதத்தில் கூறப் பட்டுள்ளது. அதனாலே அவ்விரண்டும் வேதாந்த வாக்கிய மாகவே கருதப்படும். ஆனால் பஞ்சாக்கர மந்திரம் சிவாகமத்துள்ளும் கூறப்படுதலால் வேதாந்த வாக்கியமாய் இருப்பதோடன்றிச் சிவாகம வாக்கியமாகவும் உள்ளது என்பதை அறிஞர் உணர்வாராக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமூலர் தத்துவம் அசி மகாவாக்கியத்தை எடுத்துக் கொண்டு அன்வயம் பண்ணும் முறையில், சீவபதமாகிய துவம் பதத்தை முன்வைத்தும், பின் இயக்கும் பரனைக் குறிக்கும் தத்பதத்தை இரண்டாவதாக வைத்தும், அதன் பின் மேற்சொன்ன இரண்டையும் ஐக்கியப்படுத்திக் கொள்ளும் அசி பதத்தை மூன்றாவதாக வைத்தும் 'துவம் தத்அசி' என்று வழங்குவர். மேலும் அவர் துவம் பதத்திற்குப் பஞ்சாட்சரத்தில் 'ய'காரத்தையும் தத் பதத்திற்கு 'வ'காரத்தையும், அசிபதத்திற்கு 'சி' காரத் தையும் உரிமைப்படுத்துவர்.

இந்த முறையில் வந்த 'ய', 'வ', 'சி', என்பதை தலைமை பற்றி 'சி' 'வ' 'ய' என்று வழங்குவர்.

திருவாசகத்துள் ஓர் வார்த்தை:

திருவாசகத்துள் 'செத்திலாப் பத்துள்' வந்த *'ஒரு வார்த்தை'* என்ற சொல்லையும், திருவாசகத்துள் 43 ஆவது பதிகமாய் வந்துள்ள *'திருவார்த்தை'* என்ற பதிகச் சொல்லையும் அறிஞர் ஒப்பிட்டு ஆராயவேண்டும். திரு வார்த்தை என்ற பதிகத்தில் வந்துள்ள,

''மாதிவர் பாகன் மறைபயின்ற
வாசகன் மாமலர் மேயசோதி
கோதில் பரங்கரு ணையடியார்
குலாவுநீதி குணமாக நல்கும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து
ஆதிப் பிரமம் வெளிப்படுத்த
அருளறி வாரெம் பிரானாவாரே''

(திருவார்த்தை-1)

என்ற இப்பாடலை அறிஞர் கருதுக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்பாட்டில் வந்துள்ள *'மறைபயின்ற வாசகன்'* என்பது வேதாந்த மகாவாக்கியத்தை உணர்ந்தவன் என்பதையும், *'ஆதிப் பிரமம் வெளிப்படுத்த அருளறி வாரெம் பிரானாவாரே'* என்ற சொல்லால் வேதாந்த மகாவாக்கியத்தால் ஆதிப்பிரமம் வெளிப்படுத்தப்பட்டது என்ற செய்தியையும் நாம் உணர்ந்து கொள்கின்றோம்.

மேலும் மாணிக்கவாசகர் கோயிற்திருப்பதிகத்தில்,

'மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே!'

(கோயிற்றிருப்பதிகம் - 5)

என்று கூறியுள்ளதை நோக்கினால், அங்கு வந்துள்ள *'மறை'* என்பது 'ஓர் வார்த்தையாகிய வேதாந்த மகா வாக்கியத்தையும்; *'மறையின் பொருளுமாய்'* என்பது அதற்குக் கொள்ளப்படும் இலட்சியார்த்தப் பொருளையும் உணர்த்துகின்றன என்பதை அறிஞர் தெளிவாக உணர்ந்து கொள்க. இனி அதற்குரிய மறையின் பொருளை நாம் ஆராய்வோம்.

மறையின் பொருள்:

தத்துவம் அசி மகாவாக்கியத்திற்குச் சிலர் 'சீவன்' 'பரன்' என்ற இரண்டு பொருள்களையே கொள்வர். ஆனால் திருமூலர், 'சீவன், பரன்,' ஐக்கியசிவம்' என்று மூன்று பொருள்களைக் கொள்கின்றார்.

மாணிக்கவாசகர் மறையின் பொருளை இரண்டு என்று கருதுகிறாரா? மூன்றென்று கருதுகின்றாரா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பதை நாம் ஆராய வேண்டும். 'மாணிக்கவாசகர்' 'உயிருண்ணிப்பத்து' மூன்றாம் பாட்டில்,

'எனை நான் என்பத றியேன்'

என்று கூறுகின்ற பகுதி சீவதுரியத்தைப் பற்றிய செய்தியாகும்.

'அதிசயப் பத்துள்' ஒன்பதாம் பாட்டில்,

'உற்ற யாக்கையின் உறுபொருள்'

என்று கூறுகின்ற பகுதி பரதுரியத்தைக் கூறுகின்ற பகுதியாகும்.

'குழைத்த பத்துள்' பத்தாவது பாட்டில்,

''புகழே பெரிய பதமெனக்குப்
புராண நீதந் தருளாதே
குழகா கோல மறையோனே
கோனே என்னைக் குழைத்தாயே''

என்று கூறுகின்ற பகுதியில் *'பெரிய பதம்'* என்பது அசிபதப் பொருளாகிய குருபாதத்தைக் குறிப்பதாகும். எனவே மணிவாசகர் தொம்பதப் பொருளாகிய சீவனையும், தத்பதப் பொருளாகிய பரனையும், அசிபதப் பொருளாகிய சிவத்தையும் குறித்துள்ளார் என்க. எனவே மணிவாசகர் மகாவாக்கிய ஆராய்ச்சிக்கு மூன்று பொருள்களையே கொண்டு உள்ளார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இக்கருத்தை வலியுறுத்துவது. திருவாசகம் 'திருப்பூவல்லி' பதினொன்றாவது பாடலாகும். அதனைப் பற்றி ஆராய்வோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பாலும் அமுதமும் தேனுடனாம் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்து உள்ளங்கொண்ட பிரான்குரை
கழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ"
(திருப்பூவல்லி-11)

என்ற இப்பாட்டில் பாலும், அமுதமும், தேனுடனாய் பராபரமாய் என்பது மகாவாக்கியக் கருத்தாகும். இப்பாட்டு திருமந்திரத்துள்,

"அணுவும் பரமும் அசிபதத் தேய்ந்து
கணுவொன் றிலாத சிவமும் கலந்தால்
இணையறு பால்தேன் அமுதென" இன்பத்து
(திருமந்திரம்-2440)

என்ற பாட்டின் கருத்தை ஒத்துள்ளது. மாணிக்கவாசகர் கூறும் பராபரம் எத்தகையது என்றால் அணுதுரிய சிவமும், பரதுரிய சிவமும், கணுவொன்றிலாத அசிபத சிவமும், என்னும் மூன்றும் கலந்து விளங்குவதாம். அதற்கு உவமை பாலும் தேனும் அமுதமும் ஒன்றாகக் கலத்தலாகும். இதைத்தான் மணிவாசகர் "பாலும், அமுதமும் தேனுடனாம் பராபரமாய்" என்று குறிப்பிடு கின்றார். அப்பராபர நிலையையே "*ஞாலம் பரவுவார் நன்னெறி*" என்று சிறப்பித்துக் கூறுகின்றார். எனவே மற்ற நெறிகளெல்லாம் நன்னெறி அல்ல. இந்நெறியே நல்ல நெறி என்பது அவர் கருத்தாகும்.

மேற்கூறிய திருவாசகப் பாடலால் மாணிக்கவாசகர் திருமூலரைப் போல மகாவாக்கியத்துக்கு மூன்று செம் பொருள்களைக் கொண்டவர் என்பதும், அம்முப்பொருள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆராய்ச்சியே *'ஞாலம் பரவுவார் நன்னெறி'* என்பதுவும் நமக்குத் தெளிவாக விளங்குகின்றன.

எனவே மகாவாக்கியத்துள் தத், துவம் என்கின்ற இரண்டு பதங்களை ஆராய்ந்து *அசிபத வினையால் ஐக்கியம் கூறுவார் நெறி 'ஞாலம்பரவுவார் நன்னெறி ஆகாது'* என்பதை நாம் அறிந்து கொள்கின்றோம்.

'பண்டாய நான்மறை'

திருவாசகத்துள் 'பண்டாய நான்மறை' என்பது ஒரு பதிகமாகும். அப்பதிகம் நான்கு வேதங்களில் சொன்ன நான்கு மகாவாக்கியத்தைக் கருதி வந்ததாகும். அந்த நான்கு மகாவாக்கியங்களாவன. 'ரிக்' வேதம் முடியில் உள்ள 'பிறஞ்ஞானம் பிரமம்' என்னும் வாக்கியம் ஒன்று. 'எசுர்' வேத முடியில் உள்ள 'அகம் பிரமாஸ்மி' என்னும் வாக்கியம் ஒன்று. 'சாம' வேத முடியில் உள்ள தத்துவம் அசி என்னும் வாக்கியம் ஒன்று. 'அதர்வண' வேத முடியில் உள்ள 'அயம், ஆன்மா, பிரமம்' என்னும் வாக்கியம் ஒன்று. ஆக இவை நான்காகும் என்க. இவற்றைக் கருதி எழுந்தது 'பண்டாய நான்மறை' என்ற பதிகமாகும். இப்பதிகத்துள்,

'பேசும் பொருளுக்கு இலக்கிதமாம் பேச்சிறந்த
மாசில் மணியின் மணிவார்த்தை'

(பண்டாய நான்மறை-7)

என்பது பேசப்படும் பொருளுக்கு இலட்சியார்த்தப் பொருளாய் அமைந்தது மாசிலாமணியாகிய சிவனின் திருவார்த்தை என்பதை அறிஞர் கருதி உணர்க.

மகாவாக்கியத்திற்குப் பொருள் கூறுங்கால் அப் பொருள் 'வாச்சியார்த்தப் பொருள் என்றும், இலட்சி யார்த்தப் பொருள் என்றும் இரண்டு விதமாய் இருக்கும்'.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாச்சியார்த்தப் பொருளெல்லாம் இடம், காலம் முதலான உபாதிகளால் வேறுபட்டு வரும். இலட்சியார்த்தப் பொருள் மட்டும் வேறுபடாது வரும் என்பதை மகாவாக்கிய ஆராய்ச்சி செய்பவர் அறிவர்.

குழைத்த பத்து கூறும் செய்தி:

"குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய்
காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தால் உறுதி யுண்டோதான்
உமையாள் கணவா எனையாள்வாய்
பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோவென்று
அழைத்தால் அருளா தொழிவதே
அம்மா னேஉன் அடியேற்கே. (குழைத்தபத்து-1)

இப்பாட்டில் மாணிக்கவாசகர் உடையானாகிய இறைவனை நோக்கி, என்னுடைய பண்டைக் கொடுவினை நோய்களெல்லாம் யான் மனம் வருந்தும்படி என்னைக் குழைத்துக் கலங்கச் செய்கின்றன. அதனை நீ காக்க வேண்டும் என்று முறையிடுகின்றார்.

பின்வரும் இறுதிப்பாட்டு இக்கருத்திற்கு மாறாக உள்ளது.

"அழகே புரிந்திட்டு அடிநாயேன்
அரற்று கின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி
காட்டி யென்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதமெனக்குப்
புராண நீதந் தருளாதே
குழகா கோல மறையோனே
கோனே யென்னைக் குழைத்தாயே".

(குழைத்தபத்து-10)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்பாட்டின் பொருள்:

என்னை உடையவனே! உன் அடிநாயேன் எனக்குப் பயன் தரும் அழகான காரியங்களைச் செய்திட்டு உன்னிடத்தில் அரற்றுகின்றேன். எனக்குப் புலப்படாமல் இருக்கின்ற நீ புலப்பட்டு விளங்குகின்ற உன் திருமேனியைக் காட்டி என்னை உன் பணிக்கு உடையவனாக்கிக்கொண்டாய். நீ பணிகொண்டதனால் எனக்கு என்ன விளைந்தது? பழையோனே! குழகனே! கோலமறையோனே! கோனே! புகழமைந்த பெரிய பதத்தை நீ தந்தருளாமல் என்னைக் குழையச் செய்துவிட்டாயே! என்று கூறுகின்றார்.

விளக்கம்:

முதல் பாட்டில் என்னை வினைகள் குழைத்தன நீ என்னைக் காவாய் என்றார். இறுதிப்பாட்டில் மறை யோனாகிய நீ பெரியபதத்தை எனக்குத் தாராமல் என்னைக் குழையச் செய்துவிட்டாய் என்று கூறுகின்றார்.

இதனைக் கற்கின்றவர் மாணிக்கவாசகரைக் குழையச் செய்துவிட்ட பெரியபதம் என்ன என்பதை ஆராய்ந்து தெளிந்துகொள்ளவேண்டும் அல்லவா?

இப்பாட்டில் *'மறையோனே'* என்ற சொல் கருத் துடைய சொல்லாகும். அதற்கு 'வேதாந்த மகாவாக்கிய மாகிய மறையை உணர்ந்தவனே' என்பது பொருளாகும்.

அதை உணர்ந்த பரதுரியமாகிய நீ அசிபத ஆராய்ச்சியால் கிடைக்கும் குருபாதம் அல்லது குருபதம் என்னும் பெரிய பதத்தை எனக்குக் கொடுக்காமல் இருக்கின்றாயே! அதனைப் பெறாமையால் நான் மனம் குழைந்து வருந்துகின்றேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன் நாம் எழுதிய குருபாதம் என்பதே இங்கு பெரிய பதம் என்று அழைக்கப்படுகின்றது. அப்படியானால் சிறிய பதம் எது என்று கேள்வி எழும். அது பரதுரியமாகிய காயக்கடவுளின் அடி என்க.

பிடித்த பத்து கூறும் செய்தி

''பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற்கு அருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே''

(பிடித்தபத்து-7)

இப்பாட்டு மாணிக்கவாசகர் தத்பதப் பொருளாகிய இயக்கும் பரனை நோக்கிக் கூறியது என்க.

இதன் பெரருள்

தேசுடை விளக்கே! செழுஞ்சுடர் மூர்த்தி! செல்வமே! சிவபெருமானே! ஈசனே! என்ற விளி எல்லாம் பரதுரியத்தை நோக்கிய விளி என்க. ஈசனாகிய நீ என்னுடைய பாசத்தின் வேரினை அறுத்துவிடும் அசிபதப் பொருளாகிய பழம் பொருளை யான் பற்றுமாறு அடியனேற்கு அருள் செய்தாய். யான் உன்னை நோக்கிச் செய்த பூசனையை நீ உகந்து ஏற்றுக்கொண்டு என் சிந்தையுள்ளே நீ புகுந்து பாச வேர் அறுக்கும் பழம்பொருளின் பூங்கழலாகிய குருபாதத்தை எனக்கு உணர்த்தினாய்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலே குழைத்த பத்தில் பெரிய பதத்தை எனக்குத் தாராமல் என்னைக் குழைத்துவிட்டாயே என்று கூறினார்.

இப்பாட்டில் அப்பெரிய பதத்தை எனக்கு உணர்த்தி விட்டாய் என்று கூறுகின்றார். இங்கே உணர்த்தியது பரதுரியம். அப்பரதுரியம் மாணிக்கவாசகர் செய்த பூசனையினாலே அவருடைய சிந்தையுள் புகுந்து அச்சிந்தைக்குத் தெளிவாக விளங்கும்படி பெரிய பதமாகிய குருபாதத்தை அருளிற்று என்னும் செய்தியை அறிஞர் கூர்ந்து உணர்வாராக. ஆகையால் *குருபாதம் என்பது புறக்கண்ணுக்குத் தோன்றும் பொருளன்று. சித்தமாகிய அகக்கண்ணுக்குத் தோன்றும் மகாவாக்கிய இலட்சியார்த்தப் பொருள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்,*

இந்தக் குருபாதத்தைப் பாசவேரறுக்கும் பழம்பொருள் என்றதினால் தத்பதப் பொருளாகிய பரதுரியம் எல்லாம் பாசவேரறுக்கும் பழம்பொருள் ஆகாது என்பதை உணர வேண்டும்.

இப்பழம் பொருளை

'முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருள்'
(திருவெம்பாவை-9)

என்றும்.

'பரமா னந்தப் பழங்கடல்' (திரு அண்டப்பகுதி-66)

என்றும்.

'பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்து
ஆவி யாக்கை யான்எனது என்று
இயாதும் இன்றி அறுதலே'
(பிரார்த்தனைப்பத்து-6)

என்றும், கூறும் பகுதிகளை நோக்கி அறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதனாலே திருவாசகத்தில் பாதம் என்றோ, பூங்கழல் என்றோ, அடியென்றோ, அப்பொருளில் வரும் எல்லாச் சொற்களையும் பரதுரிய அடியா? அல்லது அசிபதப் பொருளாகிய சிவன் சேவடியா? என்பதை ஆராய்ந்து தெளிந்து கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக,

''பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ''
(திருக்கோத்தும்பி-1)

இப்பாட்டின் ஈற்றில் வந்துள்ள *''சேவேறு சேவடி''* என்பதற்கு 'சே' என்பது எருது என்று பொருள்கொண்டு 'ரிஷபத்தை ஊரும் சிவபெருமானே' என்றே பொருள் கொள்ளுகின்றனர்.

இப்பொருள் சிந்தையினால் உணரத்தக்க அசிபதத்தின் இலட்சியார்த்தப் பொருளாகிய 'சிவனுக்கு'ப் பொருந்துமா என்பதை அறிஞர் உணர்வதில்லை.

இப்பாட்டிற்கு யான் கூறும் உரை:

பூவேறு கோனாகிய நான்முகனும், இந்திரனும், பொற்பமைந்த நாவேறு செல்வியாகிய கலைமகளும், நாராயணனும், நான்மறையின் கூறான வேதாந்த வாக்கியங்களும், பெருமைமிக்க பரதுரியமாகிய சோதியும் தேவர்களும், இவர்களாலே எல்லாம் அறியமுடியாத செம்மைமிக்க பெரும்பதம் என்றும், குருபதம் என்றும் கூறப்படும் அசிபத இலட்சியார்த்தப் பொருளாகிய சிவன் சேவடிக்கே சென்று கோத்தும்பி ஊதுவாயாக என்பதாகும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதைப்போல திருவாசகத்திற்குத் திருமந்திரக் கருத்தை மனத்தில் கொண்டு எழுதவேண்டிய உரை பல உள்ளனவாம்.

பெரிய பதத்துக்கு உள்ள வேறு பெயர்கள்:

இப்பெரிய பதத்திற்கு இன்னும் பல பெயர்கள் இருக்கின்றன. திருப்பாண்டிப் பதிகத்தில்,

'பழமலம் பற்றறுத்து ஆண்டவன்
பாண்டிப் பெரும்பதமே
முழுதுல கும்தரு வான்கொடை
யேசென்று முந்துமினே'

(திருப்பாண்டிப் பதிகம்-8)

குழைத்தபத்தில் கூறிய பெரும்பதத்தை இப்பாட்டில் *'பாண்டிப் பெரும்பதம்'* என்று கூறுகின்றார்.

இப்பாண்டிப் பெரும்பதமானது 'முழுதுலகும் தருகின்ற இறைவனுடைய கொடைப் பொருளாகும் அதனை வாங்கிச் செல்வதற்கு முந்துமின்கள்' என்று கூறுகின்றார்.

இப்பாண்டிப் பதிகத்தில் உள்ள இப்பாட்டிற்கு முற்பாட்டில் (7)

'சேய நெடுங்கொடைத் தென்னவன்
சேவடி சேர்மின்களே'

(திருப்பாண்டிப்பதிகம்-7)

என்று கூறியதை நோக்கினால் இப்பாண்டிப் பெரும்பதத்திற்குத் *''தென்னவன் சேவடி''* என்ற மற்றொரு பெயரும் உண்டு என்பதை அறிகின்றோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்பாண்டிப் பதிகத்தில் உள்ள ஐந்தாம் பாடலில்

''மூலபண் டாரம் வழங்குகின்
றான் வந்து முந்துமினே''

(திருப்பாண்டிப் பதிகம்-5)

என்று கூறியதை நோக்கினால், இப்பாண்டிப் பெரும் பதத்திற்கு 'மூலபண்டாரம்' என்ற மற்றொரு பெயரும் உண்டு என்பதை அறிகின்றோம்.

ஆன்மீகத்தில் நாட்டுப்பற்று:

திருமூலர் தாம் மேற்கொண்ட முப்பத ஆராய்ச்சிக்கு, 'திருநெறி' (232) என்றும், 'குருநெறியாம் சிவமாநெறி' '(54) என்றும், 'சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்' (76) என்றும், 'முத்தமிழ் ஓசை' (2115) என்றும் பெயர் வைத்துள்ளார்.

அப்பெயர்களுள் 'முத்தமிழ் வேதம்' (75) என்பதும் 'முத்தமிழ் ஓசை' (2115) என்பதுமாகிய பெயர்கள் திருமூலரின் தமிழ்மொழிப் பற்றை நமக்கு உணர்த்துகின்றன.

அதனைப் போல, மாணிக்கவாசகரும், 'தனக்குப் பரிமிசை' வந்து அருள்செய்த ஞானாசிரியனை,

'பொன்னை யழித்தநன் மேனிப் புகழில்
திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங்
கன்வரக் கூவாய்'

(குயிற் பத்து-7)

என்று பாடுகிறார். மேற்சொன்ன பாட்டில் பாண்டிய மன்னனாகவும், சேரமன்னனாகவும், சோழ மன்னனாகவும், கூறியுள்ளமை அறிஞர் உணர்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாணிக்கவாசகர் பெரும் பேராகிய 'குருபாதத்தை' 'தென்னவன் சேவடி' என்றும், 'பாண்டிப் பெரும்பதம்' என்றும் பெயர் வைத்துள்ளதால் அவரது நாட்டுப் பற்றை அறிந்துகொள்கின்றோம்.

மற்றொரு சிறந்த செய்தி:

மாணிக்கவாசகர் முப்பத ஆராய்ச்சியால் கிடைத்த அசிபத சிவத்தை அல்லது குருபாத சிவத்தை அல்லது பாண்டிப் பெரும்பதமாகிய சிவத்தை அல்லது தென்னவன் சேவடியாகிய சிவத்தை,

''தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி''
(போற்றித்திரு அகவல்-164-165)

என்று கூறுகின்றார்.

இங்கு' தென்னாடுடைய சிவனே' என்பது அவருடைய நாட்டுப்பற்றைக் குறிக்கின்றது.

'தென்னாடுடைய சிவன்' என்றது மகாவாக்கியத்துள் 'அசி பதத்துள்' சிவத்தை வைத்து ஆராயப்படும் சிவன் என்க. இது தமிழ்நாட்டுநெறி என்பதைத் *'திருமூலரும் பேருரையும்'* என்ற பெயரில் யான் வெளியிட்டுள்ள நூலில் கூறியுள்ளேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. பெருந்திரட்டில் உள்ள திருவாசகப் பாடல்கள்

தமிழ்நாடு பல உட்பிரிவுகளை உடையது, அவற்றுள் சோழமண்டிலத்திற்கும், தொண்டைமண்டிலத்திற்கும் இடையில் உள்ள நிலப்பகுதியை நடுநாடு என்று வழங்குவர். அந்நடுநாட்டின் மேலைப் பகுதி ஒரு காலத்தில் மலையமான் நாடு என்றும்; மற்றொரு காலத்தில் ஜனநாதவளநாடு என்றும்; பிற்காலத்தில் மகதை மண்டிலம் என்றும், மகதை நாடென்றும், வழங்கப் பட்டு வந்தது.

மகத நாட்டில் 'வீரை' என்கின்ற ஊரில் அந்தணர் குலத்தில், இன்றைக்கு அறுநூறு (600) ஆண்டுகட்கு முன்னர் இரண்டு அறிஞர் தோன்றினர். அவ்விருவரின் இயற்பெயர் நமக்குத் தெரியவில்லை. அவருடைய பெயர் 'சொரூபாநந்தர்' என்றும், 'தத்துவராயர்' என்றும் அறியப்படுகின்றது. இவ்விருவரும் அம்மானும், மருமகனும் என்னும் முறையினை உடையவராவர். மேற்சொன்ன இவ்விருவரும் இரட்டைப் புலவர்போல் ஒத்து இயங்கி வந்தனர்.

திருச்சி மாவட்டத்தில் 'திருப்பைஞ்ஞீலி', 'திருவள்ளரை' என்னும் இரண்டு ஊர்களை அடுத்து விளங்கிய 'கோபத்தம்' என்னும் ஊரில் மரங்கள் அடர்ந்த பகுதியில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு, தவத்திரு-

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவப்பிரகாச சுவாமிகள் என்னும் பேரறிஞர் ஒருவர் வாழ்ந்து வருவதைக் கேள்விபட்டனர்.

சொரூபாநந்தரும், தத்துவராயரும் தவத்திரு. சிவப் பிரகாச சுவாமிகளிடம் சென்று வணங்கி, அருள்உபதேசம் பெற்றனர். அவர்கள் பிற்காலத்தில் சிதம்பரத்திற்கும், விருத்தாசலத்திற்கும் இடையில் உள்ள எறும்பூர் என்னும் ஊரில் திருமடம் அமைத்து வாழ்ந்தனர். அவ்விருவரில் சொரூபாநந்தர் என்பவர் தமிழில் உள்ள பல ஞான நூல் களை எல்லாம் படித்து, அவற்றில் உள்ள சிறந்த பிரதி களை எல்லாம் எடுத்து, முறைப்படுத்தி ஒரு திரட்டு நூலை உண்டாக்கினார். அத்திரட்டிற்குத் தம்முடைய ஆசிரியர் பெயரால் 'சிவப்பிரகாசப் பெருந்திரட்டு' என்று பெயர் அமைத்துள்ளனர்.

இப்பெருந்திரட்டு கலைக்கட்டளை என்றும் அநுபவக் கட்டளை என்றும் இரண்டு பிரிவாக அமைந்துள்ளது. அறிஞர் கலைக்கட்டளையைப் 'பொது' என்று கூறி, அது அபரஞானத்தைக் கூறுவதாகும் என்பர். அநுபவக் கட்டளையைச் 'சிறப்பு' (அ) உண்மை என்று கூறி, அது பரஞானத்தைக் கூறுவதாகும் என்பர்.

இப்பெருந்திரட்டில், மொத்தம் நூற்றுப்பதினெட்டு (118) பாடல்களைத் திருவாசகத்தில் இருந்து எடுத்து அமைத்துக்கொண்டுள்ளனர். இப்பாடல்கள் கலைக் கட்டளையில் பதின்மூன்று பாடல்களாகவும், அநுபவக் கட்டளையில் நூற்றுஐந்து (105) பாடல்களாகவும் அமைந் துள்ளன. இவற்றை அந்தத் தலைப்பின்படி பாடல்களைத் தொகுத்து அச்சிடுகின்றேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. கலைக்கட்டளை

கலைக்கட்டளையில், 'ஆத்தர் உரைச் சிறப்பில்' சிவானந்த நிலையம் என்ற நூலில் உள்ளதாக ஒரு பாடல் உள்ளது. அது திருவாசகத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றது.

'மறைகள் ஈறுடன் ஆகமம் முதற்கலை
மதித்துஅறைந் திடுபோழ்தில்
குறைவி லாவகை கேட்பவர் உடல்உளம்
குறியழிந் ததும்உண்டோ,
வறைவ தாகிய வாதவூ ரன்முதல்
ஆத்தவாக் கியம்கேட்கில்
கறையி லாவுளம் உடல்கனன் மெழுகெனக்
கரைந்தவர் கண்டீரே. (10)

மேற்கண்ட பாட்டில் 'வாதவூரன் முதல் ஆத்த வாக்கியம் கேட்கில்' உள்ளமும், உடலும் கனலில் உள்ள மெழுகைப்போலக் கரையும் என்ற செய்தி சொல்லப் படுகிறது.

• கலைக் கட்டளையில் இரண்டாவது இதப்பணையில் இதோபதேசம் என்ற தலைப்பில் இரண்டு பாடல்கள் உள்ளன.

முதல் பாட்டு - உயிருண்ணிப் பத்தில் ஐந்தாவது பாடலாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. 'பற்றுஆங்கு அவை அற்றீர்பற்றும்
பற்றுஆங்கு அதுபற்றி
நற்றாம்கதி அடைவோம் எனில்
கெடுவீர் ஓடிவம்மின்
தெற்றார்சடை முடியான்மன்னு
திருப்பெருந்துறை இறைசீர்
கற்றுஆங்குஅவன் கழல்பேணின
ரோடும்கூடுமின் கலந்தே:' (5)

இரண்டாவது பாட்டு - இதோபதேசம் என்ற தலைப்பில் யாத்திரைப் பத்தின் இரண்டாவது பாடலாகும்.

3. 'புகவே வேண்டாம் புலன்களில்நீர்
புயங்கப் பெருமான் பூம்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கஎல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத்து உள்புகுந்து
நாயே அனைய நமைஆண்ட
தகவே உடையான் தனைச்சாரத்
தளரா இருப்பார் தாம்தாமே!' (2)

குறிப்பு:

புயங்கப் பெருமான் என்றது பரதுரியத்தை; பூங்கழல்கள் என்பது அசிபதப் பொருளாகிய குருபாதத்தை. புயங்கப் பெருமானாகிய பரதுரியத்தால் சித்தத்துள் புகுந்து உணர்த்தப்பட்ட குருபாதமாகிய பூங்கழலை இந்த யாத்திரைக் காலத்தில் மிகவே நினைமின் என்று பொருள் கொள்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேற்படி கலைக்கட்டளையில் பதினைந்தாவது குருவியல் பணையில் இரண்டவது ஆசாரியர் மான்மியத்தில் திருவாசகத்துள் திருக்கோத்தும்பி பாடல்கள் ஐந்து வந்துள்ளன. அவை.

4. 'அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றுஇங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்துஏதும் இல்லாதுஎன் பற்றுஅறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவற்கே சென்று ஊதாய்
[1]கோத்தும்பி' (5)

5. 'வைத்த நிதிபெண்டிர் மக்கள்குலம் கல்வி என்றும்
பித்த உலகில் பிறப்போடு இறப்பு என்றும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவற்கே சென்று ஊதாய் கோத்தும்பி' (6)

6. கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே தான்எனக்கு
மரணம் பிறப்புஎன்று இவைஇரண்டின்மயக்கு அறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பி' (9)

7. நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனது உள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீஏதும் இல்லாதுஎன் செய்பணிகள் கொண்டருளும்
தாய்ஆன ஈசற்கே சென்று ஊதாய் கோத்தும்பி' (12)

8. 'கருவாய் உலகினுக்கு அப்புறம்ஆய் இப்புறத்தே
மருஆர் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி
அருஆய் மறைபயில் அந்தணன்ஆய்ஆண்டுகொண்ட
திருஆன தேவற்கே சென்று ஊதாய்கோத்தும்பி'(14)

பாடபேதம்: 1. கோத்தும்பி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேற்படி கலைக்கட்டளையில் பதினைந்தாவது பக்குவரியல் பணையில் ஐந்தாவது சம்பிரதாய இலக்கணத்தில் சென்னிப்பத்தில் ஆறுபாடல்கள் வந்துள்ளன.

9. 'தேவ தேவன்மெய்ச் சேவகன்
தென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலும் அறியொணா
முதலாய ஆனந்த மூர்த்தியான்
யாவர்ஆயினும் அன்பர் அன்றி
அறியொ ணாமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவடிக்கண்ணம்
சென்னி மன்னிச் சுடருமே'. (1)

10. 'அட்டமூர்த்தி அழகன்இன் அமுது
ஆய ஆனந்த வெள்ளத்தான்
சிட்டன் மெய்ச்சிவ லோகநாயகன்
தென்பெ ருந்துறைச் சேவகன்
மட்டு வார்குழல் மங்கையாளையோர்
பாகம் வைத்த அழகன்தன்
வட்ட மாமலர்ச் சேவடிக்கண்ணம்
சென்னி மன்னி மலருமே'. (2)

11. பத்தர் சூழ்ப் பராபரன்
பாரில் வந்துபார்ப் பான்எனச்
சித்தர் சூழச் சிவபிரான்
தில்லை மூதூர்ந டம்செய்வான்
எத்தன் ஆகிவந்து இல்புகுந்துஎமை
ஆளும் கொண்டுஎம் பணிகொள்வான்
வைத்த மாமலர்ச் சேவ டிக்கண்ணம்
சென்னி மன்னி மலருமே! (4)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. மாய வாழ்க்கையை மெய்என்று எண்ணி
மதித்தி டாவகை நல்கினான்
வேய தோள்உமை பங்கன்எங்கள்
திருப்பெ ருந்துறை மேவினான்
காயத் துள்அமு துஊற்ஊ றநீ
கண்டு கொள்என்று காட்டிய
சேய மாமலர்ச் சேவ டிக்கண்ணம்
சென்னி மன்னித் திகழுமே! (5)

13. பிறவி என்னும்இக் கடலைநீந்தத்தன்
பேர்அ ருள்தந் தருளினான்
அறவை என்றுஅடி யார்கள் தங்கள்
அருட்குழாம்புக விட்டுநல்
உறவு செய்துஎனை உய்யக்கொண்ட
பிரான்தன் உண்மைப் பெருக்கம்ஆம்
திறமை காட்டிய சேவ டிக்கண்ணம்
சென்னி மன்னித் திகழுமே! (7)

14. வம்பன் ஆய்த்திரி வேனைவாஎன்று
வல்வி னைப்பகை மாய்த்திடும்
உம்ப ரான்உலகு ஊடுஅறுத்துஅப்
புறத்தன் ஆய்நின்ற எம்பிரான்
அன்பர் ஆனவர்க்கு அருளிமெய்அடி
யார்கட்கு இன்பம் தழைத்திடும்
செம்பொன் மாமலர்ச் சேவ டிக்கண்ணம்
சென்னி மன்னித் திகழுமே! (9)

குறிப்பு:

சம்பிரதாயம் என்பது ஆசிரியன் மாணவனுக்குத் தீட்சா காலத்தில் செய்யும் சடங்குகளாகும். அச்சடங்கு களுள் ஒன்று ஆசிரியன் தன்னுடைய திருவடியை மாணவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

னுடைய தலையில் சூட்டி மாணவனுக்கு வீடுபேறு உண்டாக்கக் கூடிய ஞானம் உண்டாக வேண்டும் என்று கருதுதலாகும். அச்சடங்கைச் சென்னிப்பத்தில் கூறுவ தாகக் கருதுகின்றார்.

2. அநுபவக் கட்டளை:

பெருந்திரட்டில் 'அநுபவக் கட்டளை' என்பது இரண்டாவதாக உள்ளது. இக்கட்டளை பத்துப் பணை களை உடையது. அப்பத்துப் பணைகளில் உபதேசப் பணை என்பது முதலாவதாக் அமைந்துள்ளது. அவ்வுப தேசப் பணை பெருந்திரட்டில் உள்ள பணைகளில் தலைமையான பணையாகும். இப்பணை பன்னிரண்டு பிரிவுகளை உடையது. அவற்றுள் முதலில் உள்ள 'உயிர் உண்மை தரிசனமும்', இரண்டாவதாய் உள்ள 'துரிய மான்மியமும்' மூன்றாவதாய் உள்ள 'துரிய தூடணமும்', என்னும் இம்மூன்றும் ''துவம்பதப் பொருளாகிய உயிரைக் கருதியனவாம்.'' நான்காவதாய் உள்ள 'அதீததரிசனமும்' 'வியோமமான்மியமும்' ஐந்தாவதாய் உள்ள 'வியோம தூடணமும்' ஆகிய இவை ''தத்பதப் பொருளாகிய பரனைக் கருதியனவாம்.''

ஆறாவதாய் உள்ள 'பர இலக்கணமும்' ஏழாவதாய் உள்ள 'பரஅபேட்சையும்' எட்டாவதாய் உள்ள 'பர தரிசனமும்', ஒன்பதாவதாய் உள்ள 'விசுவக் கிராசமும்' பத்தாவதாய் உள்ள, 'உபசாந்தம் சொரூப அபிச்சை, சொரூபஸ்திதி, சொரூபதரிசனம்' என்பவையும் ''அசிபதப் பொருளாகிய சிவத்தைக் கருதியனவாம்.''

பதினொன்றாவதாகிய 'சிவானுபூதி' ''மூன்று பதங் களும் ஒன்றான 'குருபாதத்தைக்' கருதியதாம்''.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பன்னிரண்டாம் பகுதி ''செய்யவேண்டியவற்றைச் செய்து முடித்தல்'' என்னும் பொருளில் வரும் 'கிருத கிருத்திய இலக்கணமாம்'.

இவ்வுபதேசப்பணை ஒன்றையும் அறிஞர் ஆழ்ந்து படித்து உணரவேண்டும். இவ்வுபதேசப்பணை திருமூல ருடைய வேதாந்த மதக்கருத்துக்களைத் தெளிவாக விளக்கு வதாம். இவ்வுபதேசப் பணையால், பெருந்திரட்டு, சீவன், பரன், சிவன் என்னும் மூன்று பொருள்களையே கருதி வரும் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இப்பன்னிரண்டில் உள்ள 'துரிய தூடணமும்', 'வியோம தூடணமும்', தொம்பதப் பொருளாகிய சீவ துரியமும், தத்பதப் பொருளாகிய பரதுரியமும் பேறாகா என்பதைத் தெளிவாகக் கூறுகின்றன.

இப்பன்னிரண்டுள் 'வியோம துரிய தூடணத்தில்' இருந்தே திருவாசகப் பாடல்கள் எடுத்துகாட்டப் படுகின்றன.

(அப்பகுதியில்) அவ்வியோமதுரிய தூடணத்துள் வந்துள்ள 'சிவானந்த நிலையம்' என்கின்ற நூலில் இருந்து எடுத்துகாட்டப்பட்ட ஒரு பாடல், 'பரதுரிய தரிசனமும் பயனில்லை' என்கின்ற கருத்தை நமக்கு தெளிவாகக் கூறுகின்றது. அப்பாடலைக் காண்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதலால் அதீத அநுபவத்து . உற்றுஅங்கு
அதுதிடம் வந்தமா முனிவர்
ஓதிய அதீதம் பொருளலா மையினை
உலகறிந்து உய்வதன் பொருட்டால்
காதலால் இறைவன் கழல்களே நோக்கிக்
கனிந்தெழும் அன்பினால் அரற்றும்
ஏதம்இல் மொழிகள் அளவிலை அவற்றின்
எழிலையும் இசைவுறப் பாராய்'.

இப்பாட்டில் 'அதீதம் பொருளலாமையினாலே' 'இறைவன் கழல்களே நோக்கி' என்று கூறும் பகுதி கருதிப் படிக்கத்தக்கது. இங்கு இறைவன் கழல் என்பது குரு பாதத்தை. அக்குருபாதப் பேற்றை விரும்பிக் கூறியதாகத் திருவாசகப் பாடல்கள் இரண்டைக் கூறுகின்றார்.

கீழ்வரும் இரண்டு பாடல்கள் அனுபவக் கட்டளையுள் பதினேழாவது உபதேசப் பணையுள் ஐந்தாவதாகிய வியோமதூடணத்துள் குருபாதப் பேற்றை விரும்பிக் கூறிய பாடல்களாகும்.

முதலாவதுதிருவாசகம் கோயில் மூத்த திருப்பதிகத்தில் வந்துள்ள பாடல்:

15. அரைசே! பொன்னம்பலத்து ஆடும்
அமுதே! என்றுஉன் அருள்நோக்கி,
இரைதேர் கொக்குஒத்து இரவுபகல்
ஏசற்று இருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசாது இருந்தால் ஏசாரோ'' (5

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரண்டாவது, திருவாசகம் அடைக்கலப்பத்தில் வந்துள்ள பாடல்:

16. ''மாவடு வகிரன்ன கண்ணி
பங்காநின் மலரடிக்கே
கூவிடு வாய்கும்பிக் கேயிடு
வாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடு குழல்போற்
கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடு வேன்உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே'' (8)

குறிப்பு:

மேற்கண்ட திருவாசகப் பாடல்கள் இரண்டும்' குரு பாதப் பொருளை அடைவதற்காக, 'பொன்னம்பலத்து ஆடும் அமுதையும்', 'மாவடு வகிரன்ன கண்ணி பங்கனையும்' நோக்கிக் கூறியதாகத் திரட்டு ஆசிரியர் கூறுகின்றார்.

பெருந்திரட்டு பக்கம் 405 இல் அனுபவக் கட்டளையில் பதினேழாவது உபதேசப் பணையுள் ஏழாவதாகிய பரஅபேட்சை என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

17. மானேர் நோக்கி மணவாளா!
மன்னே! நின்சீர் 1மறைப்பித்துஇவ்
ஊனே புகஎன் தனைதூக்கி
உழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை
அறிந்து நீயே அருள்செய்து
கோனே கூவிக் கொள்ளுநாள்
என்றுஎன்று உன்னைக் கூறுவதேர?
(திருவாசகம், குழைத்தபத்து, 4)

பாடபேதம்: 1 மறப்பித்து இவ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

18. கடலே அனைய ஆனந்தம்
கண்டார் எல்லாம் கவர்ந்துண்ண
இடரே பெருக்கி ஏசற்றிங்கு
இருத்தல் அழகோ அடிநாயேன்
உடையாய்! நீயே அருளுதியென்று
உணர்த்தாது ஒழிந்தே கழிந்தொழிந்தேன்
சுடரார் அருளால் இருள்நீங்கிச்
சோதீ! இனித்தான் துணியாயே
(திருவாசகம், குழைத்தபத்து, 7)

விளக்கம்:

பரவபேட்சை என்பது மேலான குருபாதப் பொருளை அடைய விரும்பியது என்று பொருள்.

மேற்கண்ட தலைப்பில் குறுந்திரட்டில் வந்துள்ள பாடல்:

19. ''மேவும் உன்றன் அடியாருள்
விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேரும் கயற்கண்ணாள்
பங்கா உன்றன் கருணையினால்
பாவி யேற்கும் உண்டாமோ
பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்து
ஆவி யாக்கை யானெனதென்று
யாதும் இன்றி அறுதலே''.
(திருவாசகம் - பிரார்த்தனைப்பத்து - 5)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

20. ''அறவே பெற்றார் நின்அன்பர்
அந்த மின்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்பு கின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா
மாளா இன்ப மாகடலே''.
(திருவாசகம் - பிரார்த்தனைப்பத்து 6)

பெருந்திரட்டு பக்கம்-417 இல் அநுபவக்கட்டளையில் பதினேழாவது உபதேசப் பணையில் பத்தாவது உபசாந்தத்துள் சொரூபாபேட்சை என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

21. ''மேவும் உன்றன் அடியாருள்
விரும்பி யானும் ... .., ...
,,, ,... ... .,. ... ...
யாதும் இன்றி அறுதலே''
(திருவாசகம் - பிரார்த்தனைப்பத்து 5)

இப்பாட்டு பரவபேட்சை என்ற தலைப்பில் குறுந்திரட்டில் வந்துள்ளது.

22. ''தாரா அருளொன்று இன்றியே
தந்தாய் என்றுன் தமரெல்லாம்
ஆஹா நின்றார் அடியேனும்
அயலார் போல அயர்வேனோ?
சீரார் அருளால் சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை
வைக்க வேண்டும் பெருமானே''.
(திருவாசகம் - பிரார்த்தனைப்பத்து - 9)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறிப்பு:

பரவபேட்சை, சொரூபாபேட்சை இரண்டும் ஒன்றே, பரம் என்பதும், சொரூபம் என்பதும் குருபாதப்பொருளையே குறிக்கும்.

பெருந்திரட்டு பக்கம் 424-இல், மேற்கண்ட பணையுள் பதினொன்றாவது சுவானுபூதி என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

23. ''நீக்கி முன்னெனைத் தன்னொடு
நிலாவகை குரம்பையில் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன
சொற்செய்து நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத்
துகளறுத்து எழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி ஆண்டுதன் அடியரில்
கூட்டிய அதிசயம் கண்டாமே''.
(திருவாசகம் - அதிசயப்பத்து - 8)

24. கேட் டாயோ தோழி கிறிசெய்த ஆறுஒருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாம் காட்டிச் சிவம்காட்டித்
தாள்தா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடுஎய்த
ஆள்தான் கொண்டு ஆண்டவா பாடுதும்காண்
அம்மானாய்
(திருவாசகம், திருஅம்மானை, 6)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருந்திரட்டு பக்கம் 425-இல் மேற்கண்ட தலைப்பில் வந்துள்ள பாடல்கள்.

கீழ்வரும் இரண்டு பாடல்களும் சுவானுபூதி எனற தலைப்பில் திருவாசகம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இப்பொழுதுள்ள பதிப்புகளில் இல்லை.

25. ''அன்னையும் ஆயமும் கேண்மின்களோவென
தாருயிர் ஆய சிவபெருமான்
என்னதி யானென்னும் இவ்விரண்டு
மென்னுள னாயிருந் தேவந்தான்
முன்னை உறவும் பிறவும்
காணேன் மூவுலகும்பரந் தெங்குந்தானா
யின்ன தளவென்று இயம்பவொண்ணா
இன்பவெள் ளத்தெனை யிட்டனனே''.
(பெருந்திரட்டு - 425)

26. ''வானும் நிலனும் அடையக் கேண்மோ
வள்ளல் பெருந்துறைமேய பெம்மான்
தானுந்தன் தையலும் ஆகி யென்றன்
சதுரை அழித்துமாறந்த போதே,
ஊனும் உயிரும் உணர்வும் ஒன்றா
உரோமமெல் லாய்சிலிர்ப் பித்தென்னே,
யானும் எனையறி யாத வண்ணம்
இன்ப வெள்ளத்தெனை யிட்டனனே.''
(பெருந்திரட்டு-425)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருந்திரட்டு பக்கம்-437 இல் பதினெட்டாவது அநுபூதிப் பணையில், மூன்றாவது அனுபூதி நிலைமை என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

27. ''உம்பர்கட்கு அரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்துஎன் குடிமுழுது ஆண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே!
செம்பொருள் துணிவே! சீருடைக் கழலே!
செல்வமே! சிவபெரு மானே!
எம்பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்குஎழுந்து அருளுவது இனியே!
(திருவாசகம், பிடித்தபத்து 1)

28. ''அருளுடைச் சுடரே! அளிந்ததோர் கனியே!
பெருந்திறல் அருந்தவர்க்கு அரசே!
பொருளுடைக் கலையே! புகழ்ச்சியைக் கடந்த
போகமே! யோகத்தின் பொலிவே
தெருளிடத்து அடியார் சிந்தையுள் புகுந்த
செல்வமே! சிவபெரு மானே!
இருளிடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே?
(திருவாசகம், பிடித்தபத்து, 4)

29. அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்டு
அளவிலா ஆனந்தம் அருளிப்
பிறவிவேர் அறுத்தென் குடிமுழுது ஆண்ட
பிஞ்ஞகா! பெரியஎம் பொருளே!
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெரு மானே!
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே?
(திருவாசகம், பிடித்த பத்து, 6).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

30. புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே?
(பிடித்த பத்து - 10)

பெருந்திரட்டு பக்கம் 438-இல் மேற்கண்ட தலைப்பில் வந்துள்ள பாடல்

31. அறையோ அறிவார்க்கு அனைத்துலகும் ஈன்ற
மறையோனும் மாலுமால் கொள்ளும்-இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியாது
இருந்துறையும் என்நெஞ்சத்து இன்று!
(திருவாசகம், திருவெண்பா - 5)

பெருந்திரட்டு பக்கம் 441-இல் மேற்கண்டபணையுள் நான்காவது அனுபூதி வியப்பு என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

32. உன்னற்கு அரியசீர் உத்தர மங்கையர்
மன்னுவது என்நெஞ்சில் அன்னே என்னும்!
மன்னுவது என்நெஞ்சில் மால்அயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும்!
(திருவாசகம், அன்னைப்பத்து - 6)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

33. எனைநானென்பது அறியேன்பகல்
இரவாவதும் அறியேன்
மனவாசகம் கடந்தான் எனை
மத்த உன்மத்தன் ஆக்கிச்
சினமால்விடை உடையான்மன்னு
திருப்பெருந்துறை உறையும்
பனவான்எனைச் செய்தபடிறு
அறியேன் பரஞ்சுடரே.

(உயிருண்ணிப்பத்து - 3)

34. வினைக்கேடரும் உளரோபிறர்
சொல்லீர் வியனுலகில்
எனைத்தான்புகுந்து ஆண்டான் எனது
என்பின்புரை உருக்கிப்
பினைத்தான்புகுந்து எல்லேபெருந்
துறையில்உறை பெம்மான்
மனத்தான்கண்ணின் அகத்தான்மறு
மாற்றத்திடை யானே

(உயிருண்ணிப் பத்து - 4)

35. கோற்றேன்எனக்கு என்கோகுரை
கடல்வாய்அமுது என்கோ
ஆற்றேன்எங்கள் அரனேஅரு
மருந்தேஎனது அரசே
சேற்றார்வயல் புடைசூழ்தரு
திருப்பெருந்துறை உறையும்
நீற்றார்தரு திருமேனிநின்
மலனேஉனை யானே.

(உயிருண்ணிப் பத்து - 8)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

36. எச்சம்அறி வேன்நான் எனக்கு
இருக்கின்றதை அறியேன்
அச்சோ! எங்கள் அரனேஅரு
மருந்தேஎனது அமுதே.
செச்சைமலர் புரைமேனியன்
திருப்பெருந்துறை உறைவான்
நிச்சம்என நெஞ்சில்மன்னி
யான்ஆகி நின்றானே!
(உயிருண்ணிப் பத்து - 9)

பெருந்திரட்டு பக்கம் 44-இல் மேற்கண்ட தலைப்பில் வந்துள்ள பாடல்கள்

37. இரந்துஇரந்து உருக என்மனத்து உள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரம்தனில் பொலியும் கமலச்சே வடியாய்!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண்டு இன்றே
(கோயில் திருப்பதிகம் - 6)

38. இரும்புதரு மனத்தேனை ஈர்த்துஈர்த்துஎன் என்புருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினைஉன் கழலிணைகள்
ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவாறு அன்றேஉன் பேரருளே
(திருவேசறவு - 1)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

39. பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே ஆக்கும்வந்து என்மனத்தை - அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருள்நோக்கும்
மருந்திறவாப் பேரின்பம் வந்து.

(திருவெண்பா - 6)

பெருந்திரட்டு பக்கம் 445-இல் பத்தொன்பதாவது அருள்திறப்பணையில் முதலாவது அருள்திறவியப்பு என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்

40. புகவே தகேன்உனக் கன்பருள்
யான்என்பொல் லாமணியே
தகவே எனையுனக் காட்கொண்ட
தன்மைப்பு ன்மையர்
மிகவே உயர்த்திவிண் ணோரைப்
பணித்திஅண் ணாஅமுதே
நகவே தகும்எம் பிரான்என்னை
நீசெய்த நாடகமே

(திருச்சதகம் - 1, மெய்யுணர்தல் - 10)

41. சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புல்ன்கள் ஆர
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெரும்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டும்இலித் தனிய னேற்கே

(திருச்சதகம் - 3, சுட்டறுத்தல் - 26)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

42. ''கேட்டாரும் அறியாதான் கேடொன்று இல்லான்
கிளையிலான் கேளாதே எல்லாம் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாம் காட்டிப் பின்னும்
கேளா தனவெல்லாம் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமல் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே.''
(திருச்சதகம் - 3, சுட்டறுத்தல் - 28)

43. ''விச்சைதான் இதுவொப்ப துண்டோ கேட்கின்
மிகுகாதல் அடியார்தம் அடிய னாக்கி
அச்சம்தீர்த்து ஆட்கொண்டான் அமுதம் ஊறி
அகம்நெகவே புகுந்தாண்டான் அன்பு கூர
அச்சன்ஆண் பெண்ணலிஆ காச மாகி
ஆரழலாய் அந்தமாய் அப்பால் நின்ற
செச்சைமா மலர்[1]புரையும் மேனி எங்கள்
சிவபெருமான் எம்பெருமான் தேவர் கோவே.''
(திருச்சதகம் - 3, சுட்டறுத்தல் - 29)

பாடபேதம்: 1. புனையும்

44. ''வான நாடரும் அறியொ ணாதநீ
மறையி லீறுமுன் தொடரொ ணாதநீ
ஏனை நாடரும் தெரியொ ணாதநீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நான்உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே.''
(திருச்சதகம் - 10, ஆனந்தாதீதம் - 95)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

45. ''கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்போடு
இறப்பென்னும்
அற்பாவம் என்றிரண்டு அச்சம்தவிர்த்தென்னை
ஆண்டுகொண்டான்
மறந்தேயும் தன்கழனான் மறவாவண்ணம் நல்கியஅத்
1திறம்பாடல் பாடிநாம் தெள்ளேணம்
கொட்டாமோ.''
(திருத்தெள்ளேணம் – 8)

பாடபேதம்: 1. திறம்பாடி

பெருந்திரட்டு பக்கம் 448-இல் மேற்கண்ட தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

46. ''கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன
புனவேய் அனவளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப்பிடித்து ஆட்கொண்டவா
நயந்துநெஞ்சம்
சினவேல்கண் நீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ
(திருத்தெள்ளேணம் – 10)

47. ''அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பதுகேட்டு
உலகமெல்லாம்
சிரிக்கும் திறம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ''.
(திருத்தெள்ளேணம் – 3)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

48. ''அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயம் காத்தென்னை ஆண்டுகொண்ட
பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ,''
(திருத்தெள்ளேணம் - 4)

49. ''கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால்
வார்கழல்வந்து
உற்றிறுமாந் திருந்தேன்எம் பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்குஇடுமாறு அன்றேநின்
பொன்னருளே.''
(திருவாசகம் - திருவேசறவு - 5)

50. ''முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள்
பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார்
அச்சோவே.''
(திருவாசகம் - அச்சோப்பதிகம் - 1)

51. ''செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக்கு அருளியவாறு யார் பெறுவார்
அச்சோவே.''
(அச்சோப்பதிகம் - 9)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

52. ''நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன்
கூத்தையெனக்கு
அறியும் வண்ணம் அருளியவாறு யார் பெறுவார்
அச்சோவே.''
(அச்சோப்பதிகம் - 2)

பெருந்திரட்டு பக்கம் 449-இல் மேற்கண்ட தலைப்பில் வந்துள்ள பாடல்:

53. ''யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்கும் கீழாம் அடியேனை - யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென்
எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை.''
(திருவாசகம் - திருவெண்பா - 8)

பெருந்திரட்டு பக்கம் 451-இல் மேற்கண்ட பணையுள் இரண்டாவதாகிய அருள்நினைந்து அழிதல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

54. ''வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய்
விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னையாண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையி னேற்கே.''
(திருச்சதகம் - 3, சுட் டறுத்தல் - 21)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

55. ''வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன்நான் என்றுன்னை அறிவித் தென்னை
ஆட்கொண்டெம் பிரானனானாய்க் கிரும்பின் பாவை
அனையநான் பாடேன் நின்றாடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோ நான்ஆன வாறு
முடிவறியேன் முதல்அந்தம் ஆயி னானே''.
(திருச்சதகம் - 3, சுட்டறுத்தல் - 22)

56. ''பேசிற்றாம் ஈசனே எந்தாய் எந்தை
பெருமானே என்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றாம் திருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே என்று பின்றா
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே எந்தாய் அந்தோ
என்னைநீ ஆட்கொண்ட வண்ணந் தானே.''
(திருச்சதகம் - 3, சுட்டறுத்தல் - 24)

57. ''கட்டு அறுத்தெனை ஆண்டு ஆரநீ(று)
இட்ட அன்பரோடு யாவரும் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடுஇரண் டும்அறி யேனையே''
(திருச்சதகம் - 5, கைம்மாறுகொடுத்தல் - 49)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

58. ''ஈசனேஎன் எம்மானே
எந்தை பெருமான் என்பிறவி
நாச னேநான் யாதுமொன்று
அல்லாப் பொல்லா நாயான
நீச னேனை ஆண்டாய்க்கு
நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேஅம் பலவனே
செய்வ தொன்றும் அறியேனே.''
(திருச்சதகம் - 6, அநுபோக சுத்தி - 51)

பெருந்திரட்டு பக்கம் 452-இல் மேற்கண்ட தலைப்பில் வந்துள்ள பாடல்கள்

59. ''புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
உண்டியாய் அண்ட வாணரும் பிறரும்
மற்று யாரும்நின் மலரடி காணா
மன்ன என்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றினாய் பதையேன் மனமிக உருகேன்
பரிகி லேன்பரி யாவுடல் தன்னைச்
செற்றிலேன் இன்னும் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.''
(செத்திலாப் பத்து - 2)

60. ''அன்ப ராகிமற் றருந்தவம் முயல்வார்
அயனும் மாலுமற் றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வார்எ னைப்பலர்
நிற்க இங்கெனை எற்றினுக் காண்டாய்
வன்ப ராய்முரு டொக்கும்என் சிந்தை
மரக்கண் என்செவி இரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.''
(செத்திலாப் பத்து - 4)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

61. ''நடித்து மண்ணிடைப் பொய்யினைப்
பலசெய்து நானென தெனும்மாயக்
கடித்த வாயிலே நின்றுமுன்
வினைமிகக் கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை
தேடிய அரும்பொருள் அடியேனை
அடித்த டித்துவக் காரமுன்
தீற்றிய அற்புதம் அறியேனே.
(அற்புதப்பத்து - 3)

62. மாடும் சுற்றமும் மற்றுள
போகமும் மங்கையர் தம்மோடும்
கூடி அங்குள குணங்களால்
ஏறுண்டு குலாவியே திரிவேனை
வீடு தந்தென்றன் வெந்தொழில் வீட்டிட
மென்மலர்க் கழல்காட்டி
ஆடு வித்தென தகம்புகுந்து
ஆண்டதோர் அற்புதம் அறியேனே''
(அற்புதப் பத்து - 5)

பெருந்திரட்டு பக்கம் 458-இல் பத்தொன்பதாவது அருள்திறப் பணையுள் மூன்றாவது அருள்இரந்து உரைத்தல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

63. ''யானேதும் பிறப்பஞ்சேன்
இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன்
மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச்
சிவனேஎம் பெருமான்எம்
மானேஉன் அருள்பெறுநாள்
என்றென்றே வருந்துவனே''
(திருச்சதகம் - 2, அறிவுறுத்தல் - 12)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

64. ''வழங்குகின் றாய்க்குன் அருளார்
அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை
யேன்என் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர்
பருகத்தந் துய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேன்உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே,''

(அடைக்கலப்பத்து-10)

65. ''கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல்
லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே
இருக்கப் பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்
லாதெங்கள் உத்தமனே.''

(திருச்சதகம், - 1, மெய்யுணர்தல் - 2)

பெருந்திரட்டு பக்கம் 460-இல் மேற்கண்ட பணையுள் நான்காவதாகிய அருள்விருப்பதனால் அச்சம் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்.

66. ''விச்சுக் கேடு பொய்க்காகா
தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் கானார் எல்லாரும்
வந்துன் தாள்சேர்ந்தார்
அச்சத் தாலே ஆழ்ந்திடு
கின்றேன் ஆரூரெம்
பிச்சைத் தேவா என்னான்
செய்கேன் பேசாயே''

(திருச்சதகம்-9 ஆனந்த பரவசம்-81)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

67. ''பஞ்சின்மெல் லடியாள் பங்கநீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே''
(வாழாப்பத்து-6)

பெருந்திரட்டு பக்கம்-496 அநுபவக்கட்டளையில் இருபதாவது இறையியற் பணையுள் பதினொன்றாவது இறையருள்காலம் புகழ்தலில் வரும் பாடல்

இவ் இறையருள் காலம் புகழ்தல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்களில், தத்துவதேசிகம் என்ற நூல் பாடல் திருவாசகப் பாடலைப் போன்றது:

பெருந்திரட்டு பக்கம்-499-இல் மேற்கண்ட பணையுள் பன்னிரண்டாவதாகிய கழிந்தநாளுக்கு இரங்கல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்:

68. ''சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீரில்ஐம்பு லன்களான்
முந்தை யான காலம் நின்னை
எய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி ழுந்தி லேனென்
உள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை யாய நின்னை யின்னம்
எய்த லுற்றி ருப்பனே.''
(திருச்சதகம் - 8, ஆனந்தத்து அழுந்தல், 79)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருந்திரட்டு பக்கம்-503இல் மேற்கண்ட பணையுள் பதினான்காவதாகிய இறைவனைப் பிரிந்தழுங்கல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்

69. ''உரியேன் அல்லேன உனக் கடிமை
உன்னைப் பிரிந்திங் கொருபொழுதும்
தரியேன் நாயேன் இன்ன தென்று
அறியேன் சங்கரா கருணையினால்
பெரியோன் ஒருவன் கண்டுகொள் என்றுன்
பெய் கழல்அடி காட்டிப்
பிரியேன் என்றென்று அருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே.''

(எண்ணப்பதிகம் - 2)

70. ''பொய்யனேன் அகம்நெகப் புகுந்தமு தூறும்
புதும லர்க்கழல் இணையடி பிரிந்தும்
கையனேன் இன்னும் செத்திலேன் அந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே அரசே அருட்பெருங் கடலே
அத்த னேஅயன் மாற்கறி யொண்ணாச்
செய்யமே னியனே செய்வகை அறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.''

(செத்திலாப்பத்து-1)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருந்திரட்டு பக்கம் 504இல் மேற்கண்ட
தலைப்பில் வந்துள்ள பாடல்கள்

71. அறுக்கி லேன்உடல் துணிபடத் தீப்புக்கு
ஆர்கி லேன்திரு வருள்வகை அறியேன்
பொறுக்கி லேன்உடல் போக்கிடம் காணேன்
போற்றி போற்றிஎன் போர்விடைப் பாகா
இறக்கி லேன்உனைப் பிரிந்தினி திருக்க
என்செய் கேன்இது செய்கஎன் றருளாய்
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

(செத்திலாப் பத்து - 6)

72. காணும தொழிந்தேன் நின்திருப்
பாதம் கண்டுகண் களிகூரப்
பேணும தொழிந்தேன் பிதற்றும
தொழிந்தேன் பின்னைஎம் பெருமானே
தாணுவே அழிந்தேன் நின்னினைந்
துருகும் தன்மைஎன் புன்மைகளால்
காணும தொழிந்தேன் நீயினி
வரினும் காணவும் நாணுவனே.

(எண்ணப்பதிகம் - 2)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருந்திரட்டு பக்கம் 506-இல் மேற்கண்ட பணையுள் பதினைந்தாவதாகிய இறைவனை நினைந்தழிதல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்:

73. ''வாழ்த்துவதும் வானவர்கள்
தாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து
தம்மையெல்லாம் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந்
தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான்
யானும்உன்னைப் பரவுவனே''.
(திருச்சதகம்-2, அறிவுறுத்தல்-16)

பெருந்திரட்டு பக்கம் 508-இல் மேற்கண்ட பணையுள் பதினாறாவதாகிய பரமராகம் (மேலான ஆசை) என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

74. ''கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உண்ணின் றுருகுவர் அன்னே என்னும்
உண்ணின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும்''
(அன்னைப் பத்து-2)

75. ''ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேடம் இருந்தவா றன்னே என்னும்
வேடம் இருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடும் இதுவென்னே அன்னே என்னும்''
(அன்னைப்பத்து-4)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருந்திரட்டு பக்கம் 509-இல் மேற்கண்ட தலைப்பில் வந்துள்ள பாடல்:

76; ''சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்று
ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன்; உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்''
(திருவம்மானை-17)

பெருந்திரட்டு பக்கம் 512-இல் மேற்கண்ட பணையுள் பதினேழாவதாகிய இறைவனைக் காணவிரும்பல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்:

77. ''மேலை வானவ ரும்அறி யாததோர்
கோல மேயெனை ஆட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேஇவை வந்துபோம்
கால மேஉனை யென்றுகொல் காண்பதே''
(திருச்சதகம்-5, கைம்மாறு கொடுத்தல்-43)

பெருந்திரட்டு பக்கம் 513-இல் மேற்கண்ட தலைப்பில் வந்துள்ள பாடல்

78. எய்த்தேன் நாயேன் இனியிங்
கிருக்க கில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர்
அறியா மலர்ச்சே வடியானே
முத்தா உன்தன் முகவொளி
நோக்கி முறுவல் நகைகாண
அத்தா சால ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே.''
(ஆசைப்பத்து - 6)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருந்திரட்டு பக்கம் 515-இல் மேற்கண்ட பணையுள் பதினெட்டாவதாகிய இறைவனைக் கூடவிரும்பல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்

79. ''மின்னே ரனைய பூங்கழல்கள்
அடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னே ரனைய மலர்கொண்டு
போற்றா நின்றார் அமரரெல்லாம்
கன்னே ரனைய மனக்கடையாய்க்
கழிப்புண் டவலக் கடல்வீழ்ந்த
என்னே ரனையேன் இனியுன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே''
(ஆனந்த மாலை - 1)

80. ''சீல மின்றி நோன்பின்றிச்
செறிவே யின்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங் காட்டி வழிகாட்டி
வாரா உலக நெறியேறக்
கோலங் காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே''.
(ஆனந்தமாலை-3)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருந்திரட்டு பக்கம் 517இல் மேற்கண்ட பணையுள் பத்தொன்பதாகிய இறை திருக்குறிப்பாட்சி என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

81. ''முன்னின்று ஆண்டாய் எனைமுன்னம்
யானும் அதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன்
பிற்பட் டொழிந்தேன் பெம்மானே
என்னின் றருளி வரநின்று
போந்தி டென்னா விடில்அடியார்
உன்னின் றிவனார் என்னாரோ
பொன்னம் பலக்கூத் துகந்தானே''
(கோயில் மூத்த திருப்பதிகம்-2)

82. ''உகந்தா னேஅன் புடையடிமைக்கு
உருகா வுள்ளத் துணர்விலியேன்
சகந்தான் அறிய முறையீட்டால்
தக்க வாறன் றென்னாரோ
மகந்தான் செய்து வழிவந்தார்
வாழ வாழ்ந்தாய் அடியேற்குன்
முகந்தான் தாரா விடின்முடிவேன்
பொன்னம் பலத்தெம் முழுமுதலே''.
(கோயில் மூத்த திருப்பதிகம்-3)

பெருந்திரட்டு பக்கம் 529இல் மேற்கண்ட பணையுள் இருபத்துமூன்றாவது தலைவனை நோக்கி தமைவெறுத்து உரைத்தல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்:

83. ''போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்தும்நின
றாற்றன் மிக்கஅன் பாலழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறுங்
கூற்றம் அன்னதோர் கொள்கையென் கொள்கையே''
(திருச்சதகம்-5, கைம்மாறு கொடுத்தல்-45)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருந்திரட்டு பக்கம் 533இல் அநுபவக்கட்டளையின் இருபத்து ஒன்றாவது ஏவற்பணையில் முதலாவதாகிய ஏவல் விரும்பல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

84. ''கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே''.
(திருச்சதகம்-46)

85. ''கண்டது செய்து கருணைமட்
டுப்பரு கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண்
டாய்நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போல் பணித்துப்
பணிசெயக் கூவித்தென்னைக்
கொண்டெனெந் தாய்களை யாய்களை
யாய குதுகுதுப்பே''.
(நீத்தல் விண்ணப்பம்-33)

பெருந்திரட்டு பக்கம் 535இல் மேற்படி பணையுள் இரண்டாவதாகிய ஏவற்கிறப்பு என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

86. ''[1]பாட்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்தலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக்
கொண்டன்றே''
(குலாப்பத்து-9)

பாடபேதம்: 1, பாழ்செய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

87. கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் [1]பாங்கனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்கு
இம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே

(குலாப்பத்து-10)

பாடபேதம்: 1. கூறனுக்குக்

**பெருந்திரட்டு பக்கம் 537இல் அநுபவக்கட்டளையில்
இருபத்திரண்டாவது அன்பியல் பணையில்
முதலாவது அன்பினைவேண்ட்ல் என்ற
தலைப்பில் வந்துள்ள பாடல்கள்**

88. ''பரந்துபல் லாய்மலர் இட்டுமுட்
டாதடி யேஇறைஞ்சி
இரந்தஎல் லாம்எமக் கேபெற
லாம்என்னும் அன்பருள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன்
வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாய்அரு ளாய்நின்னை
ஏத்த முழுவதுமே''.

(திருச்சதகம்-1, மெய்யுணர்தல்-6)

89. நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் உடையானே.

(திருச்சதகம்-2, அறிவுறுத்தல்-11)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

90. ''ஐய நின்ன தல்ல தில்லை
மற்றொர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை
பொய்மை யேனென் எம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க
வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த அன்ப ரன்பெ
னக்கு மாக வேண்டுமே''.
(திருச்சதகம்-8, ஆனந்தத்தழுந்தல்-73)

91. ''வேண்டும் வேண்டும் மெய்யடியார்
உள்ளே விரும்பி யெனையருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த
அமுதே அருமா மணிமுத்தே
தூண்டா விளக்கின் சுடரனையாய்
தொண்ட னேற்கும் உண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே'',
(பிரார்த்தனைப்பத்து-4)

92. ''போகம் வேண்டி வேண்டி லேன்பு
ரந்த ராதி யின்பமும்
ஏக நின்க ழலி ணைய
லாதி லேனென் எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து
குஞ்சி யஞ்ச லிக்கணே
யாக என்கை கண்கள் தாரை
யாற தாக ஐயனே'',
(திருச்சதகம்-8, ஆனந்தத்தழுந்தல்-72)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருந்திரட்டு பக்கம்-540இல் மேற்கண்ட பணையுள் இரண்டாவதாகிய பக்தி மான்மியம் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

93. ''பக்தி வலையில் படுவோன் காண்க''
(திருவண்டப்பகுதி-42)

94. ''முத்திக் குழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக் கருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ''.
(திருத்தெள்ளேணம்-12)

பெருந்திரட்டு பக்கம்-542இல் அநுபவக் கட்டளையின் இருபத்தைந்தாவது அன்புப் பணையுள் முதலாவதாகிய அன்பர்கூட்டம் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

95. ''சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வேறு இருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடும்
தலவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே''.
(கோயில் மூத்த திருப்பதிகம்-9)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

96. ''இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே''.

(திருப்பள்ளிஎழுச்சி-4)

பெருந்திரட்டு பக்கம் 544இல் மேற்கண்ட பணையில் இரண்டாவதாகிய அன்புரிற் கூடவிரும்பல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

97. ''உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும்அரு
ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே''.

(கோயில் மூத்த திருப்பதிகம்-1)

98. ''முழுமுத லேஐம் புலனுக்கும்
மூவர்க் கும்என் றனக்கும்
வழிமுத லேநின் பழவடி
யார் திரள்வான் குழுமிக்
கெழுமுத் லேயருள் தந்தி
ருக்கஇரங் குங்கொல் லோஎன்று
அழுமது வேயன்றி மற்றென்
செய்கேன் பொன்னம் [1]பலத்தரசே''

(கோயில் மூத்த திருப்பதிகம்-4)

பாடபேதம்: 1 பலத்தரைசே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

☐ திருவாசக அநுபூதி

''ஏசா நிற்பர் என்னைஉனக்
கடியான் என்று பிறரெல்லாம்
பேசா நிற்பர் யான்றானும்
பேணா நிற்பேன் நின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்கும்
திருவோ லக்கம் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடும்
எந்தாய் இனித்தான் இரங்காயே''.

(கோயில் மூத்த திருப்பதிகம்-6)

100. ''அருளா தொழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆரிங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோடு உனைப்பிரிந்து
வருந்து வேனை வாவென்றுன்
தெருளார் கூட்டம் காட்டாயேல்
செத்தே போனால் சிரியாரோ''.

(கோயில் மூத்த திருப்பதிகம்-8)

பெருந்திரட்டு பக்கம் 545-இல் மேற்கண்ட தலைப்பில் வந்துள்ள பாடல்:

101. ''செடியா ராக்கைத் திறமற
வீசிச் சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு
கொண்டேன் கண்ணிணை களிகூரப்
படிதா னில்லாப் பரம்பர
னேஉன் பழவடி யார்கூட்டம்
அடியேன் காண ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே''

(ஆசைப்பத்து-9)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருந்திரட்டு பக்கம்-547இல் மேற்கண்ட பணையுள் மூன்றாவதாகிய அன்பரிற் கூடிய வியப்பு என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

102. ''வைப்புமா டென்றும் மாணிக்கத்
தொளியென்றும் மனத்திடை உருகாதே
செப்பு நேர்முலை மடவர
லியர்தங்கள் திறத்திடை நைவேனை
ஒப்பி லாதன உவமனி
லிறந்தன ஒண்மலர்த் திருப்பாதத்து
அப்பன் ஆண்டுதன் அடியிரிற்
கூட்டிய அதிசயம் கண்டாமே''.

(அதிசயப்பத்து-1)

103. ''நீக்கி முன்னெனைத் தன்னொடு''

(அதிசயப்பத்து-8)

இப்பாட்டு பதினேழாவது உபதேசப் பணையுள் பதினோராவதாகிய சிவானுபூதி என்ற தலைப்பில் வந்துள்ளது.

104. ''உற்ற ஆக்கையின் உறுபொருள்
நறுமலர் எழுதரு நாற்றம்போல்
பற்ற லாவதோர் நிலையிலாப்
பரம்பொருள் அப்பொருள் பாராதே
பெற்ற வாபெற்ற பயனது
நுகர்ந்திடும் பித்தர்சொல் தெளியாமே
அத்தன் ஆண்டுதன் அடியிரிற்
கூட்டிய அதிசயம் கண்டாமே''.

(அதிசயப்பத்து-9)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

105. ''நீதி யாவன யாவையும்
நினைக்கிலேன் நினைப்பவ ரொடும்கூடேன்
ஏத மேபிறந் திறந்துழல்
வேன்தனை என்னடி யானென்று
பாதி மாதொடும் கூடிய
பரன்பரன் நிரந்தர மாய்நின்ற
ஆதி ஆண்டுதன் அடியரிற்
கூட்டிய அதிசயம் கண்டாமே''
(அதிசயப்பத்து-2)

பெருந்திரட்டு பக்கம் 556-இல் மேற்கண்ட பணையுள் ஆறாவதாகிய அன்பொடு கூடாவன்பருக்கு அஞ்சுதல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

106. ''புற்ற்ல்வா 'ழரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடையெம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வம் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே''. (அச்சப்பத்து.1)

பாடபேதம்: 1 புற்றில்வா ளரவும்

107. ''வன்புலால் வேலும் அஞ்சேன்
வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்
என்பெலாம் உருக நோக்கி
அம்பலத் தாடு கின்ற
என்பொலா மணியை யேத்தி
இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே''. (அச்சப்பத்து-3)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

108. ''வெருவரேன் வேட்கை வந்தால்
வினைக்கடல் கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறு காணா
எம்பிரான் தம்பி ரானாம்
திருவுரு வன்றி மற்றோர்
தேவரைத் தேவ ரென்ன
அருவரா தவரைக்கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே''.

(அச்சப்பத்து-2)

109. ''தறிசெறி களிறும் அஞ்சேன்
தழல்விழி யுழுவை அஞ்சேன்
வெறிகமழ் சடையன் அப்பன்
விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்கள் ஏத்திச்
சிறந்தினி திருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே''.

(அச்சப்பத்து-8)

110. ''கோணிலா வாளி அஞ்சேன்
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீணிலா அணியி னானை
நினைந்துறைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர
வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே''.

(அச்சப்பத்து-10)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருந்திரட்டு பக்கம் 558இல் அநுபவக் கட்டளையின் இருபத்தாறாவது நெஞ்சுப் பணையில் முதலாவதாகிய அன்பொடு கூடா நெஞ்சினை நோதல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

111. ''ஆடு கின்றிலை கூத்துடை
யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும்
செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின்
றதுமிலை [1]துணையிலை பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ
றலறிலை செய்வதொன் றறியேனே''.
(திருச்சதகம்-4, ஆத்துமசுத்தி-31)

பாடபேதம், 1 துணையிலி

112. ''அறிவி லாத எனைப்புகுந்
தாண்டுகொண்டு அறிவதை [1]யருளிமெய்ந்
நெறியெ லாம்புல மாக்கிய
எந்தையைப் பந்தனை யறுப்பானைப்
பிறிவிலாத வின்னருள்கள்பெற்
றிருந்துமா றாடுதி பிணநெஞ்சே
கிறியெ லாமிகக் கீழ்ப்படுத்
தாய்கெடுத் தாயென்னைக் கெடுமாறே''
(திருச்சதகம்-4. ஆத்துமசுத்தி - 32)

பாடபேதம்: 1 யருளிமே னெறியே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

113. ''மாறி நின்றெனைக் கெடக்கிடந்
தனையையெம் மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றலம் இனியுனைச்
சிக்கெனச் சிவனவன் திரள்தோள்மேல்
நீறு நின்றது கண்டனை
யாயினும் நெக்கிலை யிக்காயம்
கீறு கின்றிலை கெடுவதுன்
பரிசிது கேட்கவும் கில்லேனே.''
(திருச்சதகம்-4. ஆத்துமசுத்தி - 33)

114. ''கிற்ற வாமன மேகெடு
வாயுடை யானடி நாயேனை
விற்றெ லாமிக வாள்வதற்
குரியவன் விரைமலர்த் திருப்பாதம்
முற்றி லாவிளந் தளிர் பிரிந்
திருந்துநீ யுண்டன வெல்லாமுன்
அற்ற வாறுநின் னறிவுநின்
பெருமையும் அளவறுக் கில்லேனே.''
(திருச்சதகம்-4 ஆத்துமசுத்தி-34)

பெருந்திரட்டு பக்கம்-565-இல் மேற்கண்ட பணையின் மூன்றாவதாகிய நெஞ்சினை உடன்படுத்தல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்

115. ''இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்
திருந்திரந்து கொள்நெஞ்சே யெல்லாம்—தருங்காண்
பெருந்துறையில் மேவிய பெருங்கருணை யாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து''
(திருவெண்பா-10)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருந்திரட்டு பக்கம் 572-இல் மேற்கண்ட பணையுள் ஐந்தாவதாகிய நெஞ்சோடு மகிழ்தல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்

116. ''பண்டாய நான்மறையும் பாலனுகா மாலயனும்
கண்டாரும் இல்லைக் கடையேனைத்-தொண்டாகக்
கொண்டருளும் கோகழிஎங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா றுரை.''

(பண்டாய நான்மறை-1)

பெருந்திரட்டு பக்கம் 574இல் அநுபவக் கட்டளையின் இருபத்தேழாவது தோத்திரப்பணையுள் முதலாவதாகிய பாடவிரும்பல் என்ற தலைப்பில் வந்துள்ள பாடல்கள்:

117 ''மன்ன எம்பிரான் வருக என்னெனை
மாலு நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன எம்பிரான் வருக என்னெனை
முழுதும் யாவையும் இறுதி யுற்றநாட்
பின்ன எம்பிரான் வருக என்னெனைப்
பெய்க ழற்கணன் பாயெ னாவினாற்
பன்ன வெம்பிரான் வருக என்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே.''

(திருச்சதகம்-10 ஆனந்தாதீதம்-99)

118. ''பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டும்நான் போற்றி யம்பலத்
தாடு நின்கழல் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே,''

(திருச்சதகம்-10 ஆனந்தாதீதம்-100)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பேராசிரியர் திரு. அடிகளாசிரியரின் வாழ்வும் பணியும்

(அ. சிவபெருமான்)

தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் வடவெள்ளாற்றின் வடக்குக் கரையில் உள்ளது குகையூர் என்னும் கூகையூராகும் இவ்வூரை இலக்கியங்கள் குகையூர் என்று கூறும். பொது மக்கள் கூகையூர் என்று கூறுவர்.

திருமூல நாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் இவ்வூருக்கு வந்து, ஆற்றங்கரைப் புதருள் தங்கி, சிவயோக சமாதியை மேற் கொண்டிருந்தார். அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார்.

அவ்வூரை ஆண்டிருந்த குறுநில மன்னனாகிய மாலாங்கன் என்பவன் சித்தநாதருடைய பெருமையை உணர்ந்து தன் மனைவியுடன் வந்து பேரன்புடன் அவர்க்குப் பணிவிடை செய் தொழுகினான். அவ்விருவருடைய பேரன்பினையும் மகப்பேறின்றி மூப்படைந்துள்ள நிலையினையும் உணர்ந்த சித்தநாதர், அவ்விருவரையும் இளமை உடையவராக ஆக்கி, வீரசைவ சமய நெறியை மேற்கொண்டு வாழுமாறு செய்து, பக்குவற்கு உபதேசிக்கும் மாதவக் குருபரனாக மாலாங்கனை ஆக்கினர்.

அம்மாலாங்கனிலிருந்து அவன் பரம்பரை சித்தநாதேச்சுரா தீனமாக ஆயிற்று.

அப்பரம்பரையில் பிற்காலத்தில் பட்டத்துப்பெரியசாமி ஐயர் என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி குங்கும அம்மாள் ஆவார். அவ்விருவரும் நன்கு படித்தவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்விருவர்க்கும் கி.பி. 1910–இல் சாதாரணயாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தனுர் இலக்கினத்தில் பூசம்நாளில் திரு. அடிகளாசிரியர் முதல் மகனாகப் பிறந்தார். இவரின் பிள்ளைப்பெயர் குருசாமி அய்யர் என்பதாகும். பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கத்தலைவர் தவத்திரு மறை மலையடிகளார் கருத்துப்படி திரு. அடிகளாசிரியர் எனப் பெயரை மாற்றிக் கொண்டார்.

இளமைக்காலமும் கல்வியும்

இவர்க்கு ஏழாம் யாண்டில் தந்தையார் காலமாகி விட்டார். இவர் தாயார் குங்கும அம்மாள் என்பவர்தான் இவரைப் பேணிப்புரந்து கல்வி கற்குமாறு செய்தார். பெரம் பலூருக்கு அண்மையிலுள்ள நெடுவாசல் என்னும் ஊர் இவர் தாயார் பிறந்த ஊராகும். தாய்மாமன் இருவராவர். மூத்தவர் திரு. கு. சுப்பிரமணிய தேவர். இளையவர். திரு. கு. சிவப்பிரகாச தேவர் ஆவார். இவ்விருவரும் நன்கு தமிழ் பயின்றவர்கள். மருத்துவக்கலை, சோதிடக்கலை ஆகியவற்றிலும் வல்லவர்கள். அடிகளாசிரியர் இவர்கள் (தாய்மாமன்) வீட்டில் தங்கி, தமிழ்ப் பயிற்சியையும் வடமொழிப் பயிற்சியையும் பெற்றார்.

பெரம்பலூரில் வாழ்ந்த திரு. மருதநாடார் என்பவரிடம் சோதிடக் கலையைக் கற்றுக்கொண்டார். முசிறி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த உயர்திரு. வீ. குமாரவீரையர் என்பவரிடம் நன்னூல் காண்டிகை உரையை மட்டும் முறைப்படி பாடங் கேட்டார். 1937–இல் இவர் தனியாகப் பயின்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்வெழுதித் தமிழ்ப் புலவர் பட்டத்தைப் பெற்றார்.

மயிலம் கல்லூரியில் பணி

14—7—1938–இல் மயிலம் திருமடத்தில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்ற பெயரால் ஒரு தமிழ்க் கல்லூரி தோன்றிற்று. அக்கல்லூரியில் இவர் முதலாசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக்கழக ஒப்புதல் பெற்றபின் 1—7—41 இலிருந்து 30—11—41 வரை விரிவுரையாளராகவும், 1—12—42 இலிருந்து 1—7—1950 வரை துணைத்தலைவராகவும் அங்குப் பணியாற்றினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கரந்தைத் தமிழ்க் கல்லூரிப் பணி

பின்னர் 3-7-1950-இலிருந்து 3-7-1970 வரை தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் விரிவுரையாளராகவும், துணை முதல்வராகவும் பணியாற்றினார். 4—4—70-இலிருந்து ஓய்வு பெற்றார்.

ஓய்விற்குப்பின்:

சேலம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்திருந்த தனியார் தமிழ்க் கல்லூரி ஒன்றில் முதல்வராக மூன்றாண்டுகள் பணி யாற்றியுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஆராய்ச்சி யாளராக ஓராண்டு (1977) பணியாற்றியுள்ளார்.

20—1—1982ஆம் நாளிலிருந்து 1—10—1985ஆம் நாள் வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சுவடிப் புலத்தில் றசிப்புநிலை இணைப்பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சியைச் செய்து வந்தார். அதன்பின் மூப்பின் காரண மாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தாமே விலகிக் கொண்டார். மூப்பின் காரணமாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட அவர் தம் இல்லத்திலிருந்து அப்பணியை (தொல்காப்பிய ஆய்வுப் பணியை) நிறைவு செய்து வழங்கினார்.

குடும்பம்

இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்.

என்று தமிழுக்காக வாழ்ந்து வரும் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள், தம் பிறந்த ஊரிலேயே பிறந்த கூரை வீட்டிலேயே மண்தரையில் இன்னமும் அமர்ந்து இந்த மண்ணோடு இருக்கும் பற்றை நிலைப்படுத்துவார் போல் வளங்குன்றிய வாழ்வே வாழ்ந்து வருகிறார். தமிழ்ப் பணிக்காகவே தம் பொருளா தாரத்தைச் செலவிட்டு, வேண்டுமென்றே வளங்குன்றிய வாழ்வைத் தேடிக் கொண்டவராவார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறிவுசான்ற மூன்று ஆண்மக்களும், அமைதி சான்ற மூன்று பெண்மக்களும் வாசுகி அனைய மனையாளுமே இவரது சொத்துக்களாக உள்ளனர். சிந்தனை செய்தே சிறந்த இவர் உடல் இன்று பலரின் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. எழுதி எழுதியே முதிர்ந்த இவரது கைகள் எழுத மறுக்கின்றன. நடந்தே சிறந்த கால்கள் நடை தடுமாறுகின்றன. ஆனால் சிந்தனை மட்டும் தடுமாறாமல் தமிழையே இன்றும் சிந்தித்துழ கொண்டிருக்கின்றது. அகவை (91) முதிர்ந்த நிலையில் எந்த ஆசையும் அற்று, தம் நூல்கள் அச்சேறி உலாவர வேண்டு மென்ற பற்று ஒன்றுடன் மட்டுமே இவர் வாழ்ந்து வருகிறார்.

அடிகளாசிரியரின் படைப்புகள்

1. உரைநூல்கள்:

அ. உரைப் பதிப்புக்கள் (உரையோடு விளங்கிய நூல்களைப் பதிப்பித்தல்)

1	அருணகிரி அந்தாதி – சரசுவதிமகால் வெளியீடு	1967
2	மருதூரந்தாதி உரை – சரசுவதிமகால் வெளியீடு	1968
3	காலச் சக்கரம் – சரசுவதிமகால் வெளியீடு (சோதிட நூல்)	1969–79
4	வராகர்ஓராசாத்திரம் (சோதிட நூல்) சரசுவதிமகால் வெளியீடு	1970–81–91
5	சிவஞான தீபம் உரை – சரசுவதிமகால் வெளியீடு	1997
6	சிவப்பிரகாச விகாசம் உரை – சரசுவதிமகால் வெளியீடு	1997

ஆ. உரைவரைவுகள் (தாமே உரை எழுதி வெளியிட்டமை)

7	முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ்உரை	1958
8	சேக்கிழார் பிள்ளைத்தமிழ் உரை	1967
9	தமிழகக் கல்வெட்டு விளக்கவுரை (மு. கோவிந்தராசனாருடன் இணைந்து எழுதியமை)	1957–58
10	திருவலஞ்சுழி தேவாரப்பாடல்கள் உரை	1956
11	திருவாசகக்கோயில் திருப்பதிகம் உரை	1981

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12	சிவபுராணச் சிற்றுரை	1986–96
13	சதமணிமாலை மூலமும் உரையும்	1990
14	சித்தாந்த சிகாமணி அங்கத்தலத்திரட்டு உரை	1992
15	ஸ்ரீமத்சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி	1993
16	குதம்பைச் சித்தர் பாடலும் உரையும்	1999
17	திருமூல ஔவையார் அருளிய நல்வழி மூலமும் உரையும்	1999

2. பதிப்பு நூல்கள்:

(ஓலைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவை)

18	வீரசைவப் பிரமாணம்	1936
19	சதமணிமாலை (மூலம் மட்டும்)	1938
20	சிவப்பிரகாச விகாசம் (மூலம் மட்டும்)	1939
21	காமநாதர் கோவை	1947
22	மேன்மைப் பதிகம்	1957
23	சதுர்லிங்க தசகோத்திர சதகம்	1968

3. ஆராய்ச்சி நூல்கள்:

24	தொல்காப்பியம்–எழுத்து இளம்பூரணம்	1969
25	'ஐவகையடியும்' என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப் பல்கலைக்கழகம்)	1977
26	தமிழ் இலக்கண இலக்கியங்களில் சைவசித்தாந்தம்	1978
27	தொல்காப்பியம்–சொல்–இளம்பூரணம் (தமிழ்ப் பல்கலைக்கழகம்)	1990
28	தொல்காப்பியம்–பொருள்–செய்யுளியல் (தமிழ்ப்பல்கலைக்கழகம்)	1985
29	தொல்காப்பியம்–பொருள்–எட்டு இயல் பட்டும் (தமிழ்ப்பல்கலைக்கழகம்–அச்சில்)	

4. படைப்பிலக்கிய நூல்கள்:

அ. செய்யுள் வடிவம்

30	பிள்ளைப் பாட்டு	1945
31	திருஅரசிலிக் காதை	1948

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

32 குழந்தை இலக்கியம் 1963
33 சான்றாண்மை (கோப்பெருஞ்சோழன் பற்றியது) 1964–1975
34 சென்னிமலை முருகன் தோத்திரம் 1980
35 அரசியல் இயக்கம் 1981
36 பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் (குழந்தை இலக்கியம்) 1983
37 அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் 1984
38 உளத்தூய்மை 1984–94
39 தண்ணிழல் (திருமுடிக்காரியைப் பற்றிய அரிய இலக்கியம்) 1390
40 மறவர் நத்தக்குன்றமரும் திருமுருகன் திருவடிப் பாமாலை 1993
41 தொழிலியல் 1993
42 மெய்ப்பொருட் காதை 1995
43 தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும் (தமிழியக்க வெளியீடு) 1996
44 ஒன்பான் கோள் வணக்கப் பாடல்கள் (தமிழியக்க வெளியீடு) 1999

ஆ. உரைநடை

45 எங்களூர் 1937
46 தொடக்கப்பள்ளி–நாடகம் 1949
47 வீரசைவ சிவ பூஜாவிதி 1976
48 விலையேற்றமும் வாழும் வழியும் 1984
49 திருமூலரும் பேருரையும் (மகா வாக்கிய ஆராய்ச்சி) 1998 (தமிழக அரசின் முதல் பரிசு பெற்ற நூல்)
50 காயத்துள் நின்ற கடவுள் 1999
51 கீதையின் அறிவுப்பொருட்கள் 2000
52 திருவாசக அநுபூதி 2001

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருள்முட்டுப் பாட்டினால் முடங்கிக் கிடக்கும் அச்சேறா நூல்கள்

1 குழந்தை இலக்கியம் (தொகுதி மூன்று)
2 கலித்தொகை உரை (குறிஞ்சிக் கலி)
3 பிரபுலிங்கலீலை உரை
4 அடிகளாசிரியரின் சமுதாயப் பாடல்கள்
5 அடிகளாசிரியரின் இலக்கணக் கட்டுரைகள்
6 அடிகளாசிரியரின் இலக்கியக் கட்டுரைகள்
7 திருக்குறள் உரை (133 குறள் வரை)
8 முப்பால்–உரைநடை
9 தொல்காப்பியச் செய்யுளியல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிழை திருத்தம்

வ. எண்	பக்கம்	வரி	விவரம் (பிழை)	திருத்தம்
1.	3	11	உவந்தே	வந்ததே
2.	4	17	பரோதய	பரோதயம்
3.	5	19	சிவபதமாகிய	சீவபதமாகிய
4.	6	18	அம்மாயைப்	அம்மாயை
5.	9	21	பாபடல்	பாடல்
6.	14	5	இருவருள்	இவருள்
7.	25	12	பிறஞ்ஞானம்	பிரஞ்ஞானம்
8.	52	10	ப்க்கம்–44	பக்கம்–444
9.	63	4	அல்லேன	அல்லேன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவாசக அநுபூதி

ஆசிரியர் திரு. அடிகளாசிரியன்
பதிப்பாசிரியர் திரு. அ. சிவபெருமான்



திரு. அடிகளாசிரியன்

குருபாத நெறி என்ற பெயருடைய தெய்வச் சிவநெறியைப் பின்பற்றி வாழ்தல் வேண்டும். இக்குருபாத நெறியைத் திருமூலரும், தமிழ்நாட்டுச் சித்தர்களும், மாணிக்க வாசகரும் எவ்வெவ்வாறு பின்பற்றினர் என்பதை இந்நூல் உணர்த்துகின்றது.